விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 18 திங்கட்கிழமை (30.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 133

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இடம்பெற வேண்டும்



### நெடுந்தீவில் ரணில் தெரிவிப்பு

(நெடுந்தீவு)

ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தி சகல இன மக்களும் இணைந்து வாழக்கூடிய சூழலை இந்த நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என எதிர்க் கட்சி தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் குழுவினர் நேற்று நெடுந்தீவுக்கும் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

நெடுந்தீவு 4 ஆம் வட்டாரத்தில் உள்ள கரமத்தை கந்தசுவாமி கோவிலில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாட்டில் இவர்கள் பங்குபற்றியதோடு மக்கள் சந்திப்பிலும் ஈடுபட்டனர். இதன்போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது முழு நாட்டிற்கும் பொதுவான தீர்வாக இருக்க வேண்டும். எல்லா மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியதான தீர்வுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சரி ஏனைய எதிர்க் கட்சிகளும் சரி நாடாளுமன்ற தெரிவுக் குழுவிற்குள் இடம்பெற வேண்டும். ஆனால் அதற்கான சூழல் தெரிவுக் குழுவில் இருக்க வேண்டும்.

மேலும் வடக்கின் அபிவிருத்தி என்பது வேடிக்கையாக இருக்கக் கூடாது. மக்களிற்கு பயனுள்ளதாக அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இங்கு மேற்கொள்ளப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக் குழு அமெரிக்கா வர முன்னர்

# 'செயல்திட்டத்தை' கொழும்பில் வெளியிடுக

## வலியுறுத்துகிறது அமெரிக்கா

**உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் தயாரித்து வரும் செயல்திட்டத்தை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினர் வாஷிங்டன் வருவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக கொழும்பில் வெளியிடுமாறு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.**

பீரிஸ் தலைமையிலான குழுவினர் வாஷிங்டன் செல்லும்போது ஹிலாரி கிளின்டனிடம் கையளிப்பதற்காகவே இந்த செயல் திட்டத்தை அரசாங்கம் தயாரித்து வரும் நிலையில் அமெரிக்கா இவ்வாறு அறிவித்துள்ளது.

அத்துடன் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலும் வெளியிடுமாறு அரசாங்கத்திற்கு அமெரிக்கா கூறியிருந்த போதிலும் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் இவ்விடயம் தொடர்பிலும் பீரிஸ் தலைமையிலான குழுவினரிடம் அமெரிக்கா கேள்வி (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் சென்று துரோகம் இழைக்காதீர்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மே தின ஊர்வலத்தில் பங்குபற்றுவதன் மூலம் கட்சிக்குத் துரோகம் இழைக்காமல் கொழும்பில் நடைபெறவுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் நினைவு தின நிகழ்வில் பங்குபற்றுமாறு ஐ.தே.க. மறுசீரமைப்புக் குழுவினர் நேற்று பிரசாரங்களில் ஈடுபட்டனர்.

மேல் மாகாண சபை உறுப்பினர் சிறிலால் லக்திலக, தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி (20ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதியின் 'தமிழீழம்' அரசு அவதானிக்கிறது-யாப்பா




(கொழும்பு)

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் தி.மு.கவின் தலைவருமான கருணாநிதி தெரிவித்து வரும் தமிழீழம் தொடர்பான பரப்புரைகளை இலங்கை அரசாங்கம் அவதானித்து வருகின்றது.

இக்கருத்துக்களின் எதிர்கால விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதனைப் பொறுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது என பிரதி அமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் தமிழீழம் உருவாவதற்கு இந்தியா ஆதரவும் (20ஆம் பக்கம் பார்க்க)

## பீரிஸை சந்திப்பதற்கு முன் ஹிலாரி இந்தியா செல்வார்



வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை எதிர்வரும் 18 ஆம் திகதி வாஷிங்டனில் சந்திப்பதற்கு முன்னர் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியாவுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் இவர் எதிர்வரும் 05 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்போது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம் கிருஸ்ணா மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரையும் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வை வழங்க அழுத்தம் கொடுங்கள் தமிழக எம்.பிக்கள் மத்திய அரசிடம் கோரிக்கை

(புதுடில்லி)

இலங்கை- இந்திய உடன்படிக்கையில் உருவான பதின்மூன்றாம் திருத்தச் சட்டமூலத்தை உடன் நடைமுறைப்படுத்துவதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை வழங்க இலங்கை அரசாங்கத்திற்கு இந்திய மத்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த இந்திய நாடாளுமன்றக் குழுவில் இடம்பெற்றிருந்த தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களான சுதர்சன நாச்சியப்பன், எம்.கிருஸ்ணசாமி, வி.சேத்தன் மற்றும் மணிக்தாகூர் ஆகியோர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். இக்கோரிக்கைக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒரு வரையறுக்கப்பட்ட கால எல்லையில் உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் 13 வது திருத்தச் சட்டமூலம் ஆகியவற்றை (20ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் ஜெனரல் பிரசன்ன கொழும்பு திரும்புகிறார்

(கொழும்பு)

பிரித்தானியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றும் போர்க் குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா இந்த வாரம் கொழும்பு திரும்பவுள்ளார்.

மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா, இந்த வாரம் கொழும்பு திரும்புவார் என்றும் இனி மேல் அவர் பிரித்தானியாவில் பணியாற்ற மாட்டார் என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஈ.பி.டி.பியின் மேதின நிகழ்வில் பங்கேற்க தீவக மக்களுக்கு போல் தோழர் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மே தின மாகிய நாளைய நாள் பெரும் பேரணியை யும் பொதுக்கூட்டத்தையும் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

இந் நிகழ்வில் தீவக மக்கள் அனை வரையும் பங்கேற்குமாறு வேலணை பிரதேச சபைத் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக இணைப்பாளருமாகிய எஸ்.சிவ ராஜா (போல் தோழர்) கேட்டுள்ளார்.

மே தினம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுத்த தினமான மே தினத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மாபெரும் பேரணி யையும், பொதுக்கூட்டத்தையும் யாழ்ப்பாணத் தில் நடத்தவுள்ளது.

இந்தப் பேரணியில் பல்வேறு தொழிற் சங்க அமைப்புக்களைச்சேர்ந்த தொழிலா ளர்கள், விவசாயிகள், வர்த்தக ஊழியர்கள், கிராம உழைப்பாளர்கள் மற்றும் போக்குவரத் துத்துறை ஊழியர்கள் உட்பட பெருமளவு பொதுமக்களும் பங்கேற்கவுள்ளனர்.

இவர்களோடு எமது தீவக மக்களும் இணைந்து கொள்ளவுள்ளனர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயக மும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந் தாவின் தலைமையில் நடைபெறும் பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தில் அனைத்து தீவக மக்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் என அவர் தெரிவித்தார். (ரு)

# த.தே.கூ. கிளிநொச்சிக் கிளையின் மேதினக் கூட்டம் கரைச்சி பி.சபையில்

## மனோ, விக்கிரமபாகு பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட கிளைநடத்தும்மாபெரும்மேதினக்கூட்டம் கரைச்சி பிரதேச சபை கேட்போர் கூடத்தில்நாளை காலை9மணிதொடக்கம்நண்பகல் 12மணிவரை யாழ்.மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர்சிவஞானம் சிறிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த மேதினக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் இடது சாரிகளின் முன்னணித் தலைவர் கலா நிதி விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

இதில் பொதுமக்கள், வர்த்தகர்கள், நலன் விரும்பிகள்யாவரும்கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது. (ரு-6)

# மதுரை ஆதீனத்தின் பீடாதிபதியாக நித்தியானந்த சுவாமி நியமனம்



(மதுரை)

மதுரை ஆதீனத்தின் அடுத்த மடாதிபதி யாக சர்ச்சைக்குரிய நித்தியானந்த சுவாமிகள் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்றைய தினம் அவர் தனதுநியமனத்தை பொறுப்பேற்றுக்கொண்டார்.

மதுரை ஆதீனத்தின் அடுத்த மடாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய நித்தியா னந்தா முழுக்க முழுக்க தகுதி அடிப்படையில் தான் நியமிக்கப்பட்டிருப்பதாக ஆதீனத்தின் தற்போதைய மடாதிபதியான அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிகர் தெரிவித்துள்ளார்

நித்தியானந்தாவின் நியமனத்தை 80 சத வீத மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் அவரது நியமனத்தால் மதுரை ஆதீனத்திற்கு எந்தவிதக் களங்கமும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்தார். மதுரை ஆதீனம் நித்தியானந்தாவுக்கு விலை போய்விட்டது என்ற கூறப்படும் குற்றச்சாட்டு முற்றி லும்தவறானது என்று அவர்கருத்து வெளியிட்டார்.

அதே நேரத்தில் அடுத்த மடாதிபதியை நிய மிக்கும் முழு அதிகாரம் மதுரை ஆதீனத்தின் தற்போதை மடாதிபதியாகிய தனக்குத்தான் உள்ளதாகவும் அது பற்றிக் கேள்வி எழுப்ப யாருக் கும் உரிமை இல்லை என்றும் அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிகர் தெரிவித்தார்.

இதேவேளை செய்தியாளர்களிடம் பேசிய நித்தியானந்த சுவாமிகள், மதுரை ஆதீனத்தின் தலைமை பொறுப்பை ஏற்க முதலில் தயங்கி னேன். எதுவாயினும் சந்திக்க தயாராக இருக்க வேண்டும் என்று மதுரை ஆதீனம் எனக்கு தைரியம் ஊட்டியது. அதன் பின்னர்தான் நான் தலைமை பொறுப்பை ஏற்றேன்.

தனது தலைமையின் கீழ் மதுரை ஆதீனத் தின் சார்பில் உலகம் முழுவதும் கிளைகள் உரு வாக்கப்படும் என்றும் பள்ளிகள், கல்லூரிகள், மருத்தவக் கல்லூரிகள், நிறுவப்படும் என்று நித்தியானந்த சுவாமிகள் தெரிவித்தார். (ரு-8)

# தம்புள்ள பள்ளிவாசல் தாக்குதல் சென்னையில் ஆர்ப்பாட்டம்

## ஜனாதிபதியின் கொடும்பாவி எரிப்பு

(தம்புள்ள)

தம்புள்ளயில் உள்ள பள்ளிவாசல் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்கு தலை கண்டித்து நேற்று சென்னையில் ஆர்ப் பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கொடும்பா வியை நடு வீதியில் தீ வைத்து எரித்து தமது கண்டனத்தை வெளிப்படுத்தினர்.

பின்னர் பதாகையில் பொறிக்கப்பட்டு இருந்த இலங்கை தேசியக் கொடியின் மீது செருப்பை வீசி கோஷம் போட்டுக் கொண்டு இலங்கை தூதரகம் நோக்கி ஊர்வலமாக செல்ல முயன்றனர்.

ஜனாதிபதியின் கொடும்பாவி எரிக்கப்பட்ட தால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு மற்றும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

சென்னையில் இயங்கும் தவ்ஹீத் ஜமாத் என்ற அமைப்பினால் முன்னெடுக் கப்பட்ட இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட 100 க்கும் அதிகமானவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களுள் 40 பெண் களும் உள்ளடங்குவதாக இந்திய ஊடகங் கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ரு-8,1)

# கிணற்றிலிருந்து முதியவரின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பகுதி கிணறு ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்று காலை இந்த சடலம் மீட்கப்பட்டதாக செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா– பாவற்குளம் பகுதி யைச் சேர்ந்த 62 வயதுடைய முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சில நாட்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். செட்டிக்குளம் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரு-8,11)

**VACANCY**

சிங்களம், கணனி வகுப்புகள் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை. முன் அனுபவம் உள் ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

NORTH LEAD EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna.
Tel: 222 4459, 0772 533390 Fax: 222 4460
E-mail: northlead@gmail.com

**வாடகைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில் உள்ள வீடு, நிறுவனம் /Guest House/வாடகைக்கு பெற்று Lodge ஆக நடத்தவும் கொடுக்கப்படும்.
5 Rooms/2 Toilet/1 Hall/Kitchen/ Vehicle Parking வசதியும் உள்ளது.
No.33,2nd Lane,Collumbuthurai Road, Chundukulli, Jaffna.
075 7131027
(8259)

**ஆங்கில வகுப்புகள்**

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இலகுவாக பேச, வாசிக்க (Letter Format & Translation) என்பன வெளிநாட்டில் கற்பித்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
(பாடசாலை மாணவர்களுக்கான விசேட வகுப்புகளும் ஆரம் பமாகவுள்ளன பதிவுகளுக்கு முந்துங்கள்)
(மாதாந்தக் கட்டணம் 400/- மட்டுமே)
NORTH LEAD
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

# யாழ்.ஐந்து சந்திப் பகுதியில் மேலும் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஐந்து சந்திப்பகுதியில் ஹெரோயின் வைத்திருந்ததன் குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாண பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளனர்.

நான்கு கிராம் ஹெரோயினை தன்வசம் வைத்திருந்த போதே பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டார். நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட ஹெரோயின் கும்பலில் இவரும் ஒருவர் என்று தெரி விக்கப்படுகின்றது.

மேலும் இதனோடு தொடர்புடைய பலரும் கைது செய்யப்படுவர் என யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித் துள்ளார். (ரு-4)

# பிக்பொக்கற் திருடன் பேருந்தில் பிடிபட்டான்

(யாழ்ப்பாணம்)

பேருந்து ஒன்றில் பிக்பொக்கெற் அடித்தவர் பயணி யொருவரின் சமயோசிதப் புத்திக் கூர்மையினால் வசமாக மாட்டிக் கொண்டார். இச்சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரியகுளம் சந்திப் பகுதியில் சென்று கொண்டிருந்த யாழ்.–பருத்தித்துறை தனியார் போக்குவரத்து பஸ்ஸில் இடம் பெற்றுள்ளது. குறித்த பிக்பொக்கெற் திருடன் பஸ்ஸிலுள்ள சனநெரிசலினைப் பயன்படுத்தி பயணி ஒருவரின் பொக்கெற்றில் இருந்த 13 ஆயிரத்து 500 ரூபாயினை இலாவகமாக எடுத்துள்ளார்.

இதனை அவதானித்த மற்றொரு பயணி குறித்த திருடன் ஆரிய குளப் பகுதியில் இறங்க முற்பட்ட போது அவரை பிடித்துள்ளார். பிடிபட்ட திருடனை அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்த அவர்கள் உரிய மரியாதையுடன் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். (ரு-4)

# மரண அறிவித்தல்

## இராசா ஜெயராசா



சங்கானையைப் பிறப்பிட மாகவும் சேச் றோட், சங்கா னையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசா ஜெயராசா 29.04.2012 நேற்று ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா மற்றும் பாக்கியம் தம் பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும் சறோஜாதேவியின் அன்புக் கணவரும் பிரதீபனின் அன்புத் தந்தையும் இந்திரன் (இளைப்பாறிய உபஅதிபர் யா/உடுவில் மு.மூ. வித்தியாசாலை), திலகராணி, கனக ராசா (சன்றைஸ் ஸ்ருடியோ அன்ட் ஸ்ரேசனறீஸ், உடுவில்), ஜெயக்குமார், சகுந்தலா (ஆசிரியை, யா/தாவடி இ.த.க. பாடசாலை) ஆகியோரின் சகோதரனும் மங்கையர்க்கரசி, சிவஇன்ப நாயகி, சச்சிதானந்தம், நிர்மலா தேவி, பரமானந்தம் (சீ-நோர்), விவேகானந்தன் (கனடா), ஆனந்தராஜா (வலம்புரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை ஆராதனை அவரின் இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் பாஸ்ரர் சாம் தேவ ராஜாவின் தலைமையில் இடம்பெற்று பூதவுடல் கரைச்சி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சேச் றோட், சங்கானை. (C-6469) தகவல்: குடும்பத்தினர்

# இன்று ஒரு தகவல்

## கனவு கண்டது யார்?

ஒருநாள் காலை நேரம் ஒரு குரு படுக்கையை விட்டெழுந்து சீடர்களைப் பார்த்து, ''எல்லோரும் இப்படி வாருங்கள்'' என்று அழைத்தார்.

எல்லோரும் இவரது அழைப்பினை ஏற்று வந்தார்கள். ''என்ன வேண்டும் உங்களுக்கு'' என்ற மாதிரி சீடர்கள் குருவைப் பார்த்தார்கள். அதுவும் பயபக்தியுடன்...!

குரு... அவர்களைப் பார்த்து,''இதோ பார்... இப்போது நான் ஒரு சிக்கலான விவகாரத்திலே மாட்டியுள்ளேன். அதை நீங்கள் தான் தீர்த்து வைப்பது நல்லது'' என்றார்.

சீடர்களுக்கோ ஒன்றுமே புரியவில்லை.

''என்ன இது... இவர் இப்படியாக விடியற்காலை வேளையிலே சொல்கிறார். எல்லா விடயங்களையும் தீர்த்து வைப்பவர் நமது குருநாதர். அவரது விவகாரத்தை நாம் தீர்த்து வைப்பதா? ஆச்சரியமாக இருக்கிறதே'' என்று அவரவர் மனதினுள் நினைத்துக் கொண்டார்கள்.

இருந்தாலும் மிகவும் பணிவாக... ''சுவாமி உங்களுக்கே சிக்கலா? இந்த உலகில் சிக்கல்கள், சிரமங்களுக்கு அப்பாற்பட்டவர் அல்லவா தாங்கள்? அப்படிப்பட்ட உங்களுக்கு சிக்கல் என்று சொல்வது எப்படி நியாயமாகும்?'' என்று கேட்டார்கள்.

''எனக்கு ஏற்பட்டிருக்கும் சிக்கல் அவ்வளவு பெரிது'' என்றார் குரு.

சற்று விரிவாக எடுத்துரைக்குமாறு சீடர்கள் கேட்டுக் கொண்டனர்.

கண்ட கனவை குரு விபரித்தார்.

''நேற்று இரவு நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவிலே நான் ஒரு பட்டாம் பூச்சியாக மாறிவிட்டேன். அப்படியாக மாறிய நான் ஒவ்வொரு மலராக சென்று தேன் குடித்தேன்''என்றார்.

சீடர்கள் இதைக் கேட்டதும் திகைத்துப் போய் விட்டார்கள். ''என்ன இது... இதுவொரு பிரச்சினையா. ஒரு சாதாரண கனவு கண்டதற்காகவா குருநாதர் எங்களை அவசரமாக அழைத்தார்'' இருந்தாலும் கேட்டார்கள்...

''இதிலே என்ன சிக்கல் சுவாமி... கனவு என்பது எல்லோரும் காண்பதுதானே'' என்று ஒரு சீடன் முணுமுணுத்தான்.

''சீடர்களே! பிரச்சினை அது இல்லை. நான் இன்று காலையிலே... கண் விழித்தபோது நான் மறுபடியும் நானாகவே மாறிவிட்டேன் என்பது தெரிந்தது. ஒரு மனிதன் பட்டாம்பூச்சியாக மாறுவதற்கு கனவு காண முடியுமென்றால், அந்தப் பட்டாம்பூச்சிக்கு மனிதனாக ஏன் மாறமுடியாது. இப்போது எனக்கு யதார்த்த நிலை தெரிய வேண்டும். எது உண்மை என்பது தெரியவேண்டும். நேற்று இரவு நான் கண்டது கனவா? அல்லது இது பட்டாம்பூச்சி கண்டு கொண்டிருக்கிற கனவா?'' இதுதான் குரு கேட்ட கேள்வி.

இதைக் கேட்ட சீடர்கள் குழம்பிப் போனார்கள்.

''சுவாமி... இதுவரைக்கும் நாங்கள் தூங்கும்போது கண்டது கனவு என்றும், விழித்திருக்கும் போது பார்ப்பது நனவு என்றும் நம்பியிருந்தோம். இப்போது எங்களைக் குழப்பி விட்டீர்கள். இதற்கு பதில் அளிக்க வேண்டும்.

அதற்கு ஒரு குரு கூறினார்; ''நினைவு தான் முக்கிய அம்சம். முடிவுக்கட்டம் என்றால் பகலின் நினைவுகளை விட இரவின் கனவுகளே மிகவும் உண்மை. ஒருவன் நித்திரைக்குச் சென்றால்... அவன் காணும் கனவு பொய் என்பதை உணரமாட்டான். அவனுக்கு அது உண்மையாகத்தான் தெரியும்.

ஆகையினாலே... நாம் கனவிலேயிருந்து என்றைக்கு விழித்துக் கொள்கிறோம் என்பதுதான் முக்கியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# உருத்திரபுரம் வயற்காணிகளின் மண் அரண்களை அகற்றுங்கள்!

## விவசாயிகள் கோரிக்கை

(சிவநகர்)

இரணைமடுக்குளத்தின் கீழ் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் உருத்திரபுரம் விவசாயிகளின் வயற்காணிகளில் உள்ள மண் அரண்கள் இதுவரை காலமும் அகற்றப்படாமல் உள்ளதால் தாம் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு பாரியளவில் கஷ்டத்தை எதிர்நோக்குவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

உருத்திபுரம் பகுதியில் இருந்து குஞ்சுப் பரந்தன் வரையிலான 3 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட வயல் நிலங்களை ஊடறுத்து அண்மைக்கால யுத்த சூழலில் காப்பரண்கள் அமைக்கப்பட்டிருந்தது. இதனை அகற்றுவதற்கென 50 மீற்றர் தூரம் வரையில் வெடி பொருட்கள் உள்ளனவா என்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் அரண்கள் அகற்ற ஒழுங்கு செய்வதாக தெரியப்படுத்தப் பட்டுள்ள போதிலும் நடைமுறைப் படுத்தப்படாமையால் நெற் பயிர்ச் செய்கையை பகுதியாகவே செய்ய வேண்டியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சிவநகர் கிராமத்தில் இவ்வாறு அமைக்கப்பட்டிருந்த மண் அரண்கள் உரிய அதிகாரிகளால் சீர்செய்து கொடுக்கப்படாததால் சிறுபிள்ளைகளுடன் இங்கு மீள்குடியேறிய மக்கள் தமது சொந்தப் பணத்தில் அதாவது முப்பதினாயிரம் ரூபா வரையில் செலவிட்டு இவற்றை அகற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஏனைய மீள்குடியேறக் கிராம மக்களுக்கு ஆரம்பத்தில் ஐயாயிரம் ரூபாவும் பின்பு இருபதினாயிரம் ரூபாவும் காணி துப்பரவுப் பணிக்கென இந்திய உதவி மூலம் வழங்கப்பட்டது.

அத்துடன் எட்டு பைக்கற் சீமெந்தும் வழங்கப்பட்டன.

எனினும் உருத்திரபுரம் -மேற்கு, சிவநகர் கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு 25 ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்பட்டது.

அனைத்து மூலதனத்தையும் இழந்த நிலையில் மீள் குடியேற்றப்பட்ட தமக்கு பாகுபாடான நிலை காட்டப்பட்டுள்ளதாகவும் இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள், அரசியலாளர்களிடம் முறையிட்ட போதிலும் எவ்வித பலனும் ஏற்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(அ-2-254)

## பரிசளிப்பு விழா

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான இறுதிப்போட்டிகளின் பரிசளிப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை மைதா னத்தில் அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-24)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 85 | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 30 | 30 | 40 | 40 |
| தக்காளி | 70-90 | 100 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 20 | 20 | 30 |
| கரட் | 40 | 40 | 30 | 40-60 |
| பூசணி | 20 | 20 | 20 | 30 |
| புடோல் | 35 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 10-20 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 40-60 | 90 | 60-80 |
| பெரிய வெங்காயம் | 85 | 65 | 100 | 80 |
| பாகற்காய் | 100 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 40 | 40 | 80 |
| பயற்றங்காய் | 90 | 100 | 90 | 60 |
| லீக்ஸ் | 80 | 90 | 30 | 100 |
| பீற்றூட் | 30 | 40 | 40 | 50 |
| கறிமிளகாய் | 40 | 30 | 30 | 40 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 350 | 300 |
| போஞ்சி | -- | 100 | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | -- | 50 | -- | -- |
| கீரை - 1 பிடி | 18 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 80 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 25 | 20-25 |

## இராசி பலன்

*30.04.2012*

*(சித்திரை 18, சனிக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு*

*நவமி முன்னிரவு 9.35 மணிவரை*

*ஆயிலியம் பிற்பகல் 1.15 மணிவரை*

*இராகுகாலம் 7.27-8.57 மணிவரை*

*சுபநேரம் 11.57-1.27 மணிவரை*

**மேடம்**



சுப செய்திகள் வந்து சேரும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொழில் தொடர்பில் எடுத்த முயற்சி வெற்றியளிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்**



ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரும் நாள், விருந்தினர் வருகை அதிகரிக்கும்,பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்,புதிய தகவல்கள் வந்து சேரும்.

**மிதுனம்**



நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும், ஆலயத் திருப்பணிகளில் நாட்டம் காட்டுவீர்கள்.

**கடகம்**



மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும் நாள், உங்களின் மணியான யோசனைக்கு நல்ல புாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட்கள் வாங்க போட்ட திட்டம் கைகூடும்.

**சிங்கம்**



குடும்பச் சுமைகள் கூடும், திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**கன்னி**



அலைச்சல்கள் அதிகரிக்கும், தொழிலில் சிறுமாற்றம் செய்யும் சூழ்நிலை அமையலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும், விழாக்களில் கலந்து மகிழ்வீர்கள், சயன சுகக்குறைவான நாள்.

**துலாம்**



எதிர்கால வெற்றிக்கு திருப்புமுனையான நாள், பெரியவர்கள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்.

**விருச்சிகம்**



தொழில் வளர்ச்சி கூடும் நாள்,பணத் தேவைகள் பூர்த்தியாகும்,பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தூர தேசச் செய்திகளால் நன்மையுண்டு, அந்நியர் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள்.

**தனுசு**



உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், அரைகுறையாக இருந்த வேலைகளை ஒவ்வொன்றாக செய்து முடிப்பீர்கள், புத்திசாதுரியமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள்.

**மகரம்**



பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை,குடும்பத்தில் வாக்கு வாதங்கள் ஏற்படும் சூழ்நிலை அமையலாம், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கும்பம்**



குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்,மதிநுட்பத்தில் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்**




காணாமல் போன பொருளொன்று கைக்கு கிடைக்கலாம், உடல் நலத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

வளவன்

# செலான் வங்கியின் புதிய தலைவராக

# ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் பீரிஸ்



2012 ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் விதத்தில் சட்டத்தரணியான மொஹான் பீரிஸ் செலான் வங்கி பி.எல்.சி. பணிப்பாளராகவும் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

2008 ஆம் ஆண்டு முதல் 2011 வரையிலான காலப்பகுதியில் சட்டமா அதிபராக கடமையாற்றிய பீரிஸ், பொது மற்றும் தனிப்பட்ட அடிப்டையில் 37 வருடங்களாக ஒரு சிறந்த சட்டத்தரணியாக சேவை புரிந்த காலத்தில் தான் மேற்கொண்ட அனைத்து விதமான செயற்பாடுகளின் ஊடாகவும் கிடைக்கப்பெற்ற பல்வகைப் பட்டதும் உயர் தரமுமான அனுபவத்தை தன்னுடன் கொண்டு வந்துள்ளார்.

இச் சிறப்பம்சமானது அவர் வகித்த பதவிகளுக்கு எல்லாம் கணிசமான விதத்தில் திறம்பட பங்களிப்பு நல்குவதற்கு அவருக்கு வசதியளித்தது.

1975 ஆம் ஆண்டு ஒரு சட்டத்தரணியாக வெளியேறிய பீரிஸ், 1978 ஆம் ஆண்டில் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் உயர் நீதிமன்றத்தின் சொலிசிட்டராக வெற்றிகரமாக தகுதி பெற்றார். 1981 ஆம் ஆண்டுக்கும் 1996 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் சட்டமா அதிபர் திணைக்களததில் இவர் சேவையாற்றினார். அங்கு முதலில் அரசு தரப்பு சட்டவாதியாக இருந்த இவர், பின்னர் சிரேஷ்ட அரச தரப்பு சட்டவாதியாக பதவி உயர்த்தப்பட்டார். சட்டத் தொழிலுக்கு அவர் வழங்கிய பங்களிப்பினை அங்கிகரிக்கும் வகையில் அவருக்கு 2004இல் ஜனாதிபதி சட்டத்தரணி அந்தஸ்து வழங்கப் பட்டது.

இலங்கை மத்திய வங்கியில் இவர் சட்ட ஆலோசகராக கடமையாற்றினார். அக்காலப் பகுதியில் வங்கிகள் மற்றும் ஏனைய நிதித நிறுவணங்களிற்கான கூட்டாண்மை ஆளுகை தொடர்பான விதிகளை வரைந்தமை உள்ளடங்கலாக பல்வேறு வழிகளில் மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் பெறிமுறையை பீரிஸ் சட்ட மேற்பார்வை செய்தார்.

ஆங்கிலேய சட்டம் மற்றும் வங்கியியல் சட்டம், நாணய சட்டம் நாணயமாற்று கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் ஏனைய தொடர்புபட்ட சட்ட ஏற்பாடுகளினால் குறித்துரைக் கப்பட்டவாறான வங்கியியல் நடைமுறைகள் தொடர்பிலும் இவர் ஆழமான அறிவையையும் உள்ளார்ந்த பார்வையையும் கொண்டுள்ளார்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை உட்பட பல்வேறு சர்வதேச அமைப்புக்களில் இவர் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். அது மாத்திரமன்றி சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் ஸ்தாபக பணிப்பாளர் சபை உறுப்பினர்களுள் ஒருவருமாவார்.

வங்கியியல், நிதி மற்றம் வணிக துறைகளில் சிறப்புத்துவத்தை வெளிப்படுத்திய பெருமையைக் கொண்டுள்ள பீரிஸ், பல்வகைத் திறமை மற்றும் அனுபவத்தை பெற்ற ஆளுமைகளினால் ஏற்கெனவே உயர் நிலையில் உள்ள செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினை மேலும் பலப்படுத்து பவராக இருப்பார்.




# இந்திய பொரு.வளர்ச்சி

# இந்த ஆண்டு ௬.௯ தான்!

## - ஐ.எம்.எப்

இந்தியா உட்பட ஆசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியானது நடப்பு 2012-ம் ஆண்டில் எதிர்பார்த்த இலக்கை எட்டாது என்று சர்வதேச நிதியமான சர்வதேச நாணய நிதியம் கவலை தெரிவித்துள்ளது.

ஆசியாவின் ஒட்டுமொத்த பொருளாதர வளர்ச்சியானது 2011-ம் ஆண்டு 5.9 ஆக இருந்தது. நடப்பு ஆண்டில் 6 வீதம் அளவு தான் இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

2013-ம்ஆண்டிலும்கூட ஆசியாவின் பொருளாதார வள்ர்ச்சியானது 6.5 வீதம் அளவுக்குத் தான் தடுமாற்றமான நிலையை கொண்டிருக்கும் என்று அதன் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளிலும் கூட 2011-ம் ஆண்டை ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டில் பொருளதார வளர்ச்சி விகிதமானது குறைந்தே காணப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.9 விழுக்காடாகவும் சீனாவின் பொருளாதார வளர்ச்சியானது 8.2 ஆகவும் இருக்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இரண்டு நாடுகளினதும் 2011 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சியானது இதை விடக் கூடுதலாக இருந்ததுஎன்றும்சுட்டிக்காட்டியுள்ளது.

அதாவது 2011 ஆம் ஆண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 7.1 விழுக்காடாகவும் சீனாவின் பொருளாதார வளர்ச்சி 9.2 விழுக்காடாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவைப் பொறுத்தவரை 2013-ல் 7.3 வீதம் தான் பொருளாதார வளர்ச்சி இருக்கும் என்றும் ஐ.எம்.எப். கூறியுள்ளது.

# நோக்கியாவை முந்தியது சாம்சங்




உலகின் மிகப் பெரிய கைத்தொழில் உற்பத்தி நிறுவனம் என்ற பெயரை பின்லாந்தின் நோக்கியாவிடம் இருந்து தென் கொரிய நிறுவனமான சாம்சங் கைப்பற்றியுள்ளது.

நோக்கியா நிறுவனம் முதலிடத்தை 14 ஆண்டுகளாக தன் வசம் வைத்திருந்தது. கைத்தொலைபேசி உலக சந்தையில் 40 சதவீதம் வரை நோக்கியா கைத்தொலைபேசிகளின் விற்பனை எட்டியிருந்தது.

ஆனால் அண்மைக்காலமாக நோக்கியா கைத்தொலைபேசிகளின் விற்பனையும் அந் நிறுவனத்தின் இலாபமும் சரிவைக் கண்டு வருகின்றன.

மாறாக சாம்சங் நிறுவனமோ தமது பிரபல கேலக்ஸி ரக கைத்தொலைபேசிகள் மூலம் பெரும் விற்பனை வளர்ச்சியை கண்டுள்ளது.

சாம்சங் மற்றும் ஆப்பிள் நிறுவன கைத்தொலைபேசிகளின் அபரிமித வளர்ச்சிதான் உலக சந்தையில் நோக்கியா நிறுவனம் பெற்றிருந்த இடத்தை அது இழக்கக் காரணம் என்று கூறப்படுகின்றது.

ஆசிய நாடுகளைப் பொறுத்தவரை நோக்கியா கைத்தொலைபேசிகளுக்கு இன்றளவும் கேள்வி குறையவில்லை.

அண்மையில் இந்த நிறுவனம் மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் கைகோர்த்து விண்டோஸ் இயக்க மென்பொருள் அடங்கிய கைத்தொலைபேசிகளை விற்க ஆரம்பத்தில் விற்பனை வீழ்ச்சியை அதனால் ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடிந்தது.

# பங்குச் சந்தை விபரம்

## (வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5457.13 | 5440.52 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4923.57 | 4857.40 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 2,018.519 | |

**உயர்வடைந்தபங்குகள்(ரு)** த பினான்ஸ் கோ.(44.00), சாம்சன் இன்ரநெட்(99.50), சொப்ட்லொஜிக் பினான்ஸ்(34.00), நெஸரல்(1214.50), சிடிஐசி(268.00).

**சரிவடைந்தபங்குகள்(ரு)** சிரஸ் லிசர்(W)(0.90), பிசி பார்மா(12.20), சிலோன் லெதர்(W)(10.20), கூஜே(90.30), ஹேலீஸ் எக்ஸ்போர்ட்ஸ்(26.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# பனடோல் உற்பத்தி

# தொழிற்சாலை திறப்பு

கிளாசோஸ்மித்கிளைன் (ஜிஎஸ்கே) நிறுவனத்தின் மூலம் 217 மில்லியன் ரூபாய் முதலீட்டில் இலங்கையில் முதலாவது பனடோல் வில்லைகள் உற்பத்தி தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதி நவீன வசதிகள் கொண்டமைந்த இந்த தொழிற்சாலையை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தனர்.

இரத்மலானை பகுதியில் அமைந்துள்ள இந்த தொழிற்சாலையின் மூலம் பனடோல் வில்லைகள் உற்பத்தி செய்யப்படவுள்ளது, இதர வில்லைகள் உற்பத்தி செய்வதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த தொழிற்சாலையானது இதுவரையில் இலங்கையின் மருந்தாக்கல் துறையில் ஆகக் கூடிய முதலீட்டில் நிர்மாணிக்கப் பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாக அமைந்துள்ளது என்பதும் குறிப் பிடத்தக்கது.

இந்த தொழிற்சாலையானது ஜிஎஸ்கே நிறுவனத்தின் சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைவாக அதியுயர் தொழில்நுட்ப வசதிகள் கொண்டமைந்துள்ளதுடன் விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களைக் கொண்டியங்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்த தொழிற்சாலையின் மூலம் உற்பத்தி செயய்யப்படும் பனடோல் வில்லைகளின் தரம் அவுஸ்திரேலியா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்பும் பனடோல் வில்லைகளின் தரத்துக்கு நிகரானதாக அமைந்திருக்கும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

## (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.99 | 132.92 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 208.25 | 215.58 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 169.43 | 176.13 |
| சுவிஸ் பிராங் | 140.71 | 147.00 |
| கனேடிய டொலர் | 130.11 | 135.63 |
| அவுஸ்திரேலிய டொலர் | 132.98 | 138.91 |
| சிங்கப்பூர் டொலர் | 103.28 | 107.51 |
| ஜப்பான் யென் | 1.58 | 1.65 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.49 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.46 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# யாழ்ப்பாணத்தில் செலிங்கோ

# லைஃபின் பிரத்தியேக கிளை



யாழ்ப்பாணத்தில் தனது கிளையைத் திறந்து பத்தாண்டுகளின் பின் செலிங்கோ லைஃப் நிறுவனம் கம்பனிக்கு சொந்தமான காணியில் தனது சொந்தக் கட்டிடத்தை நிறுவி யாழ்ப்பாண மக்களுக்கான தனது அர்ப்பண சேவையை உறுதி செய்துள்ளது. கன்னாதிட்டி வீதியில் இந்தப் புதிய கட்டிடம் அமைந்துள்ளது.


செலிங்கோ லைஃப்பின் இந்த 30-வது கிளை அதன் சொந்தகக் காணியில் அமைந்துள்ளது. கிளைத் தலைவரின் கீழ் 32 விற்பனை ஆலோசகர்களும் எட்டு விற்பனை மேலாளர்களும் பணியாற்றக் கூடிய வசதிகள் இங்கு அமையப் பெற்றுள்ளன. இரண்டு மாடிகளுடன் 3500 சதுர அடி பரப்பளவு கொண்ட செலிங்கோ லைஃப் யாழ்ப்பாணக் கிளையில் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றக் கூடிய பகுதிகளும் முற்றாகக் குளிரூட்டப்பட்டுள்ளன. கீழ் மாடி அலுவலகத்தைக் கொண்டதாகவும் முதலாம் மாடி சகல வசதிகளும் கொண்ட பயிற்சிக் கூடத்தையும் கொண்டுள்ளன.

வாடிக்கையாளர்களுக்கான முழுமையான வாகனம் நிறுத்தும் வசதிகளுமுண்டு. 48.7 பேர்ச் காணியில் அமைந்துள்ள இந்தக் கட்டிடம் மேலதிக விரிவாக்க வசதியையும் கொண்டுள்ளது. 2002 மே மாதம் செலிங்கோ லைப் அதன் ஆரம்ப கிளையை யாழ்ப் பாணத்தில் திறந்துவைத்தது. அப்போது அங்கு ஒரு விற்பனை மேலாளரும் 10 விற்பனை ஆலோசகர்களும் மட்டுமே இருந்தனர்.

அடுத்த பத்தாண்டு காலப் பகுதியில் செலிங்கோ லைப் ஏழு கிளைகளை மாவட்டத்தில் திறந்துள்ளது. நெல்லியடியில் இரண்டும் அச்சுவேலியில் இரண்டும் சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய் ஆகிய இடங்களில் ஒன்றுமாக இந்தக் கிளைகள் அமைந்துள்ளன.

# தமிழீழம் அமைவதே தி.மு.கவின் விருப்பம்

## தி.மு.க.பொதுச்செயலாளர் தெரிவிப்பு




இலங்கையில் தமிழீழம் அமைய வேண்டும் என்பதே தி.மு.கவின் விருப்பம் எனவும் தி.மு.க.தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெறும் டெசோ கூட்டத்தில் இலங் கைத் தமிழர்களை பாதுகாப்பது குறித்து ஆலோசித்து முடிபு எடுக்கப்படும் எனவும் தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் சென்னை எம்பத்தூரில் நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் தமிழ் ஈழம் அமைவதே தி.மு.க.வின் விருப்பம். தி.மு.க. தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெறும் டெசோ கூட்டத்தில் இலங்கைத் தமிழர்களை பாதுகாப்பது குறித்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும். உடனடியாக உத்தரவு போடும் இடத்தில் நாம் இல்லை.

நமது வேண்டுகோளை இலங்கை அரசு மதிப்பதாக இல்லை. இந்திய அரசு நமக்கு அனுதாபம் காட்டுகிறது. அந்த அனுதாபத்தை பயன்படுத்தி எந்த அளவுக்கு நம்முடைய ஈழத் தமிழர்களை காப்பாற்றலாமோ, பாதுகாக்க வழி செய்யலாமோ அதை செய்ய வேண்டும் என்பதுதான் எங்களுடைய குறிக்கோளாக, நோக்கமாக இருக்கிறது என்றார். (அ-2)

# ஈழத்தமிழர் அழிவுக்கு தி.மு.கவும் காரணம்

## டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு



தமிழக அரசியல் அலங்கோலங்களை மாற்றுவதே எங்கள் இலட்சியம். எங்களை நம்புங்கள் நல்லாட்சி தருவோம். தமிழகத்தில் மாற்றம் தர பா.ம.க. தயாராக இருக்கின்றது என பா.ம.க. நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சென்னை தியாகராயநகர் மதுரை வீரன் கோவில் தெருவில் புதிய அரசியல், புதிய நம்பிக்கை என்ற தலைப்பில் பா.ம.க. பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் நாட்டில் அரசியல் கட்சி தலைவர்களுக்கு பிறந்த நாள் கொண்டாடுவது வெட்கக் கேடானது. தி.மு.க.ஆட்சிக்கு வந்தால் கூவம் மணக்கும், படகு ஓடும் என்றார்கள்.

5 வருடம் ஆட்சியில் இருந்த போது செய்ய முடியவில்லையே. எங்களிடம் ஆட்சிியை கொடுங்கள் 6 மாதத்தில் மாற்றி காட்டுகிறோம். கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் போதெல்லாம் தமிழ் ஈழம் பற்றி பேசுவார். 5 வருடம் ஆட்சியில் இருந்தபோது இலட்சக் கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டதை வேடிக்கை பார்த்தார். தமிழர்களின் அழிவுக்கு அவரும் காரணமாகிவிட்டார்.

மது, சினிமா இலவசங்களை கொடுத்து மக்களை மதிமயங்க செய்து சோம்பேறிகளாக்கி சீரழித்து விட்டார்கள். தமிழக அரசியல் அலங்கோலங்களை மாற்றுவதே எங்கள் இலட்சியம். எங்களை நம்புங்கள். நல்லாட்சி தருவோம். திராவிட கட்சிகளின் மாயையில் இருந்து தமிழகத்தை விடுவிப்போம். தமிழகத்தில் மாற்றம் தர பா.ம.க. தயாராக இருக்கிறது. வருகிற பாராளுமன்ற தேர்தலில் 10 தொகுதிகளை பா.ம.க. கைப்பற்றும் என்றார். (அ-2)

# மயில மரச்சந்தியில் மதகு அமைத்துத்தர கோரிக்கை

(சிவநகர்)

கிளி/ விபுலானந்தா பாடசாலை, கிளி/ பாரதிபுரம் பாடசாலைகளுக்கு செல்லும் பிரதான வீதியின் மயிலமரச் சந்தியில் மதகு ஒன்றினை அமைத்துத் தருமாறு அவ்வீதியை பயன்படுத்தும் பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதனால் தினமும் இவ்வீதியூடாக பயணிக்கும் மேற்குறித்த பாடசாலை மாணவர்களும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

இவ்வீதியானது நல்ல நிலையில் உள்ள போதும் மதகு ஒன்று அமைக்கப்படாமையால் இவ் வீதியால் பணிக்க முடியவில்லை என இவ்வீதியைப் பயன்படுத்தும் மலையாளபுரம், பாரதிபுரம், உதயநகர் மேற்கு, அம்பாள்குளம், அறிவியல் நகர் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பள்ளமாக காட்சியளிக்கும் இவ்வீதியில் ஒரு மதகினை அமைத்து தருமாறு உரிய தரப்பினரிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9-254)

# மேலதிக அரிசி, மரக்கறிகள் ஏற்றுமதி

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நாட்டில் மிதமிஞ்சிய அரிசி மற்றும் மரக்கறிகள் உள்ளதாகவும் கூடுதல் வருமானத்தை பெற்றுத் தரும் வகையில் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் விவசாய அபிவிருத்தித் திட்டங்களின் விளைவு இதுவெனவும் அவர் கூறினார்.

மேலதிகமாகவுள்ள உணவுப் பொருட்களை பதப்படுத்தும் திட்டம் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்புதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளது என்றார். (அ-2)


# எதிரணிக் கட்சிகளின் கூட்டு மேநாள் அறை கூவல் பேரணியும் பொதுக்கூட்டமும்

## 01.05.2012 செவ்வாய்க்கிழமை

பேரணி :- பி.ப 1.00மணிக்கு நல்லூர் கைலாசபிள்ளையார் முன்றலில் தொடங்கி கோவில் வீதி வழியாக மைதானம் வரை

கூட்டம்:- சென் றோக் விளையாட்டு மைதானம் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்

தலைமை:- திரு.இரா.சம்பந்தன் பா.உ (தமிழ் தேசியக் கூட்டமைப்பு)

உரையாற்றுவோர்

கௌரவ ரணில் விக்கிரமசிங்க பா.உ (எதிர்க்கட்சி முதல்வர், ஐ.தே.கட்சி)

திரு.மனோகணேசன் (ஜனநாயக மக்கள் முன்னணி)

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண (நவசமசமாஜக் கட்சி)

திரு.சிறீதுங்க ஜெயசூரிய (ஐக்கிய சோசலிசக் கட்சி)

திரு.சரத் மன்மேந்திரா( நவசிகல உறுமய)

மற்றும் மனித உரிமை அமைப்பு, தொழிற்சங்கத் தலைவர்களும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட மேற்குறித்த ஏனைய கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களும் உரையாற்றுவர்.

**பிரபல இசைக்குழு அக்னி கலைஞர்களின் பாடல் இசைநிகழ்சிகளும் இடம்பெறும்.**

அறை கூவல்கள் விடுக்கின்றோம் மேநாளில் அனைத்து ஜனநாயக சக்திகளையும் அணிதிரள அறைகூவல் விடுக்கின்றோம்

(8267)

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, எதிர்க்கட்சிகளின் மேதினக் கூட்டமைப்பு

# தன்னைத்தான் திருத்தினால் சமுதாயம் தானாக திருந்தும்

## யாழ். நீதவான் கணேசராஜா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**குற்றங்களுக்காக சிறையில் தண்டனை அனுபவித்து விடுதலையாகி வெளியே வரும் கைதிகளை எமது சமூகம் ஒதுக்கிவைத்து மேலும் தண்டனைகளினை வழங்கக்கூடாது என யாழ்.நீதவான் மா. கணேசராசா தெரிவித்தார்.**

யாழ். சிறைச்சாலையில் சிறைச்சாலை கைதிகளுக்கான பதுவருட கொண்டாட்டம் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

குற்றம் புரிந்தோர்களுக்கு நீதிமன்றங்களினால் வழங்கப்படுகின்ற தண்டனைகள் அவர்கள் திருந்தி வாழ்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தினை வழங்குவதேயன்றி அவர்களினை துன்புறுத்துவது எமது நோக்கமல்ல.

செய்த குற்றங்களுக்காக சிறையில் தண்டனை அனுபவித்து விட்டு வெளியே வருகின்ற போது அவர்களினை நல்வர்களாக வாழ வைப்பது சமுதாயத்தின் கடமையாகும்.

அவர்களை ஒதுக்கி வைப்போமாயின் மேலும் குற்றவாளிகளாகிவிடுவர்.

இன்று எம்பிரதேசத்தில் சீரழிவுகள் அதிகரித்து வருவதை பத்தரிகைகளில் காண முடிகின்றது.

சட்டத்துறையில் உள்ள நாம் எமது சமூகத்தினை முற்றாக சீர்திருத்த முடியும் என நாம் உறுதியாகக் கூற முடியாது.ஒரு சமூகத்தினை சீர்திருத்துவதில் ஒரு பங்காளிகளாகவே நாம் இருக்க முடியும்.

யோகர் சுவாமி கூறியிருக்கின்றார், உலகில் காந்தி, நபிகள், இயேசு, புத்தர் பிறந்து விட்டார்கள். உலகம் அப்படியே தான் இருக்கின்றது. அதை விட மோசமாகவும் சென்று கொண்டு இருக்கின்றது என்று.

நம்மை நாம் திருத்தினால் சமுதாயம் தானாக திருந்திவிடும். வி.ரி.தமிழ்மாறன் கூறியிருந்தார், குற்றவாளிகள் எப்போதும் பிறப்பதில்லை. ஒருவன் குற்றவாளி ஆவதற்கு சமூக காரணங்களும் உள்ளன. அவற்றினை நாம் ஆழமாக சந்தித்து பார்த்தல் வேண்டும்.

குற்றம் புரிந்து சிறைச்சாலையில் உள்ளவர்களுக்கு சில பயிற்சிகள் அவசியமானதாகும். குறிப்பாக கசிப்பு, களவு போன்றவற்றில் ஈடுபடுவர்களுக்கு யோகா, பிரணாயாமம் போன்ற பயிற்சிகள் அவசியம்.

இப்பயிற்சிகள் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல் இங்கும் ஏற்படுத்தவுள்ளோம்.

சாவகச்சேரி நீதிமன்றத்திலும் சமுதாய சீர்திருத்தப்பிரிவு ஆரம்பிப்பதற்கு எனக்கு பலர் ஒத்துழைப்பு தந்திருந்தனர்.

தண்டனையனுபவித்து வெளியே செல்கின்ற கைதிகள் நான் இனி சிறைச்சாலைக்கு திரும்பி வர மாட்டேன் என்ற உறுதியினை எடுத்துக்கொள்ளுங்கள். உங்களிடம் மாற்றம் தானாகவே வரும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## யூடோ மற்றும் ரேஸ்னின் விளையாட்டுப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவ விளையாட்டு இயக்குநர் சபையினால் யாழ். குடாநாட்டில் யூடோ மற்றும் ரேஸ்னின் விளையாட்டு சம்பந்தமான பயிற்சிகள் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளதாக பலாலி பாதுகாப்பு படைத்தலைமையக ஊடகப்பிரிவு கப்டன் டி.வி. விக்ரமஆராச்சி அறிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை யாழ். குடாநாட்டு விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கும் நாளை செவ்வாய்க்கிழமை இராணுவ வீரர்களுக்கும் இப்பயிற்சிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-9)




## வடமராட்சிப் பிரதேசத்தில் பத்து பாற்பண்ணைகள் அமைக்க முடிவு

(பருத்தித்துறை)

இலங்கை வங்கி பருத்தித்துறை கிளையினால் இந்த வருடத்தில் வடமராட்சிப் பிரதேசத்தில் பத்து பாற்பண்ணைகள் அமைக்கப்படவுள்ளதாகவும் இதற்கு பண்ணையாளர்களுக்கு அதற்கான கடன் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் இலங்கை வங்கி பருத்தித்துறைகிளை முகாமையாளர் எஸ். தர்மராசா தெரிவித்துள்ளார்.

இப்பண்ணை அமைக்கும் நடவடிக்கையின் முதற் கட்டமாக தும்பளை கிழக்கு, அம்பன், வல்லிபுரக்குறிச்சி, நவிண்டில் ஆகிய பகுதிகளிலேயே பாற்பண்ணை அமைக்கப் படவுள்ளது.

தொடர்ந்து மற்றைய இடங்களிலும் இப்பண்ணை அமைக்கப்படும். பண்ணையாளர்கள், முயற்சியாளர்களைத் தெரிவு செய்தே இக்கடன் வழங்கப்பட்டு அவர்கள் ஊடாக இப்பண்ணைகள் அமைக்கப்படவுள்ளன.

எனவே பாற்பண்ணைகளை அமைப்பதற்கு தகுதி உள்ளவர்கள் இலங்கை வங்கி பருத்தித்துறைக்கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார். (அ-3-10)

## கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

வடமராட்சியில் அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்து மாரி அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு அருகில் உள்ள குமுழடி விநாயகர் ஆலயத்தில் இருந்து பெண் பக்தர்களினால் பாற்குட பவனியும் ஆரம்பிக்கப்பட்டு ஆலயத்திற்கு எடுத்து வரப்படவுள்ளது. (அ-3-10)

## ஆன்மீக உரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் -சின்மயா மிஷன் நடத்துகின்ற வாராந்த ஸ்ரீமத் பகவத்கீதை ஆன்மீக உரை நேற்றைய தினம் தொடங்கி பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை யாழ்ப்பாணம், நல்லூர் இல.9, செட்டித்தெரு ஒழுங்கையில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் நடைபெறும்.

தொடர்ந்து மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை 16 வயதிற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான சின்மய யுவ கேந்திரா வகுப்புக்கள் இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து மாலை 5.15 மணி தொடக்கம் 6.15 மணி வரை 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான சின்மய வாசகர் வட்ட வகுப்புகளும் யாழ்ப்பாண சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவினால் நடத்தப்படவுள்ளதென சின்மயாமிஷன் நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

## உலக புவிதின நிகழ்வும் நூலக வலுவூட்டல் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபை பொதுநூலகத்தினரின் ஏற்பாட்டில் உலக புவி தின நிகழ்வும் நூலக வலுவூட்டல் நிகழ்வும் இன்று திங்கட் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப. வசந்தகுமார் தலைமையில் திருநெல்வேலி கம்பன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் கே. குகபாலன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபை செயலாளர் மே. சாந்தசீலன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சி. கஜேந்திரன், கம்பன் கழக தலைவர் கு. இராஜேஸ்மித்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் மரக்கன்றுகள் விநியோகமும், மரநடுகையின் முக்கியத்துவம் தொடர்பான கருத்துரையும் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-9)

## மாக்சிச லெனினிசக் கட்சி மே தினத்திற்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் புரட்சிகர மேதின நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம், 52/18, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள பட்டப்படிப்புக்கள் கல்லூரி வளாகத்தில் பு.ஜ.மா. லெ.கட்சியின் வட பிராந்தியச் செயலாளர் கா. செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வினையொட்டி அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் சந்தை வளாகத்திலிருந்து சைக்கிள் பேரணியொன்று ஆரம்பித்து கே.கே. எஸ். வீதி வழியாக யாழ். நகரினை வந்தடையவுள்ளது.

மாற்று அரசியல் பாதையில் மக்களே அணிதிரள்வீர் என்னும் தொனிப்பொருளில் இடம்பெறும் மே தின நிகழ்வுகளை இக்கட்சி நான்கு பிரதேசங்களில் நடத்துவது குறிப்பிடத்தக்கது. (அ-9)

## வலயமட்ட உடற்பயிற்சிப்போட்டியில் வட இந்து மகளிர் அணி சம்பியனானது



வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் நடைபெறற பெண்களுக்கான உடற்பயிற்சிப்போட்டியில் தொடர்ந்து ஆறாவது முறையாக வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரி அணி சம்பியனாகியது.

வடமராட்சி பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் விளையாட்டு விழாவில் பெண்களுக்கான உடற்பயிற்சிப்போட்டி நேற்று முன்தினம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வட இந்து மகளிர் கல்லூரி அணி முதலாம் இடத்தை பெற்று சம்பியனாகியதுடன் இரண்டாம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் மூன்றாம் இடத்தை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன. (அ-3-24)

## மேதின எழுச்சி நிகழ்வு

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசும் இணைந்து நடத்தும் மேதின எழுச்சி நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை கரவெட்டி சாமியன் அரசடி ஞான வைரவர் ஆலய முன்றலில நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைத்து தமிழ் மக்களையும் அணி திரளுமாறு மேதின ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (அ-9)

## பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு நிலைய முன்றலில் நிலையத்தலைவர் கி.குகநா தன் தலைமையில் நடைபெறவுள்ளது என செயலாளர் கு. பிரபாகர் அறிவித்துள்ளார். (அ-3-10)

# உடைக்கப்பட்ட காந்தி சிலையைப் பார்த்தார்களா?

# இந்திய எம்.பிக்களைக் கேட்கும் இலங்கை எம்.பிக்கள்



இலங்கைக்குப் போய் விட்டு வந்த இந்திய எம்.பிக்கள் ஆளுக்கு ஒரு தகவ்லை சொல்லிக்கொண்டு இருக்க, அந்தப் பக்கம் இருந்தும் அதிருப்திக் குரல்கள் கேட்கின்றன.

ஆறு நாட்கள் நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசினார்கள் இலங்கை ஜனநாயகத்துக்கான தமிழ்-சிங்களப் பத்திரிகையாளர்கள். கொழும்பு போய் இறங்கிய இந்தியக் குழுவினர் முதலில் சந்தித்தது மஹிந்த ராஜபக்ஷவின் தம்பி பசில்

**ஜூனியர் விகடன்**

ராஜபக்ஷவைத் தான். பின்னர் நீர்ப்பாசனத் துறை அமைச்சரான நிமல் ஸ்ரீபால டி சில்வாவைச் சந்தித்தார்கள்.

அடுத்த நாள் மாலை யாழ்ப்பாணம் சென்ற தூதுக் குழுவினரை டக்ளஸ் தேவானந்தா வரவேற்று இருக்கிறார். அன்று இரவு யாழ்ப்பாணம் டில்கோ ஹோட்டலில் டக்ளஸ், இலங்கை இராணுவ முன்னாள் தளபதியும் வடக்கு மாகாண ஆளுநருமான ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரிடம் இரவு விருந்தில் கலந்து கொண்டனர். மறுநாள் காலை நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு இந்திய எம்.பிக்கள் போகும் போது பெருமளவு மீனவர்களை திரட்டி இந்திய மீனவர்களுக்கு எதிராக மனுக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தனர்.

இதை இந்தியத் தூதரகர் மூலம் அறிந்த இந்தியக் தூதுக்குழு கடைசி நேரத்தில் இந்த நிகழ்ச்சியை இரத்துச் செய்து விட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாஞ்சோலை மருத்துவமனையும் முள்ளியவளையில் ஒரு பள்ளிக் கட்டடமும் புதுப்பித்து திறக்கப்பட்டது. இதற்காக முந்தையநாள் மாலையில்தான் இராணுவத்தினர் அவசரஅவசரமாக கட்டத்திற்கு வண்ணம் தீட்டினார்கள். முள்வேலி முகாம்களில் 6 ஆயிரம்பேர் தான் இருக்கின்றார்கள். அவர்களும் வரும் ஜூன் மாதத்துக்குள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு விடுவார்கள் என்று இலங்கை அரசு சொன்னதை இந்தியக் குழுவினர் கொழும்புப் பேட்டியில் சொன்னார்கள். ஆனால் இன்ன மும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை என்பது தான் உண்மை.


முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, அம்பலவன் பொக்கணை, இடைக்காடு, புதுமாத்தளன், பழமாத்தளன், வலைஞர்மடம், புதுக்குடியிருப்பு கிழக்கு, மேற்கு ஆகிய ஊர்களைச் சேர்ந்த மக்களை புதுக் குடியிருப்பு தெற்கில் திம்பிலி எனும் காட்டுப் பகுதியில் தங்க வைத்துள்ளது அரசாங்கம். இதேபோன்று முல்லைத் தீவில் 9 ஆயிரம் தமிழ் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் இருக்கின்றனர். ஆனால் கொக்குளாய் எனும் தமிழர்



உடைந்திருந்த காந்தி சிலை...

பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் அதிகமாக செய்யப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் பலாலி- வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் அதி உயர் பாதுகாப்பு வலயம் என அந்த மண்ணில் மக்கள் 25 ஆயிரம் பேரை வெளியேற்றி திறந்த வெளியில் அலைய விட்டுள்ளனர்.

இதுபோன்ற தகவல்களை இந்தியக் குழுவுக்கு தெரியாமல் இலங்கை அரசு மறைத்து விட்டது. இந்தியக் குழுவினர் சென்ற எல்லா இடங்களுக்கும் இராணுவத்தினரோ அல்லது இராணுவப் புலனாய்வாளர்களோ கூடவே வந்து கொண்டிருந்தனர் என்கிறார்கள் புலம்பெயர் இலங்கை பத்திரிகையாளர்கள்.



இதே கருத்தை எதிரொலிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. அரியநேத்திரன், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை சுயமாகப் பார்த்துப் பேச இந்தியக் குழுவுக்கு வாய்ப்பே இல்லை. குளு குளு அறைகளில் உட்காரவைத்து வடக்கு கிழக்கில் தமிழ்மக்கள் திருப்தியாக இருக்கிறார்கள் என்று இந்தியக் குழுவினர் சொல்வதை நாங்கள் நிச்சயம் ஏற்றுக் கொள்ள முடியாது. திருகோணமலை மாவட்டம் சம்பூரில் இந்திய அரசு அனல் மின்நிலையம் அமைப்பதால் அங்கு வசித்த 11 ஆயிரத்து 500 பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். அவர்களை இந்தக் குழுவினர் பார்க்கவில்லை. அது ஏன், மட்டக்களப்பில் மகாத்மாகாந்தி சிலை உடைக்கப்பட்டது. அந்த இடத்தைக் கூட இந்தியக் குழு வினர் பார்க்கவில்லை. பட்டிப் பளை கெவிலியா மடுவில் வலுக்கட்டாயமாக சிங்களவர்களை அதிக ளவில் குடியேற்றம் செய்து வருகிறார்கள். இங்கிருந்தவர்கள் எல் லாம் இந்தியக் குழுவினர் தங்களை வந்து பார்ப்பார்கள் என்று எதிர்பார்த்தனர். ஆனால் எதுவும் நடக்கவில்லை என்கிறார்.

மன்னார் மாவட்ட கூட்டமைப்பு எம்.பியான செல்வம் அடைக்கலநாதனோ இந்திய எம்.பிக்க ளின் பயணம் எமது மக்களின் பிரச்சினைகளின் பால் சிறிதளவாவது கவனத்தை ஈர்த்திருக்கிறது. செட்டிக்குளம் முகாமிலுள்ள சிலர் தங்கள் பிரச்சினைகளை சொல்ல வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் இப்படியான வாய்ப்பு மக்களுக்கு இருக்கவில்லை என்று சூசகமாகவே கருத்து கூறினார். ஏதோ ஒரு கண்துடைப்பு நாடகம் என்றே இதனை சொல்கிறார்கள் அங்குள்ள தமிழ் எம்.பிக்கள்.



**இரா.தமிழ்க்கனல்**

# ஈழத்தமிழர் போராட்டம் தொடரும்வரை டெசோவுக்கான தேவையும் உண்டாம்

## தி.இ.தமிழர் பேரவை தலைவர் சுபவீர பாண்டியன் கூறுகிறார்

(கொழும்பு)

**தனிஈழம் குறித்து தமிழர்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதை தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் உலக அரங்கிலும் முன்னெடுப்பதற்காகவே டெசோ அமைப்பு மீண்டும் ஆரம்பிக்கப் பட்டது.**

**மேற்படி டெசோ அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவரும் திராவிடர் இயக்க தமிழர் பேரவை தலைவருமான சுப வீரபாண்டியன் தெரிவித் துள்ளார்.**

கடந்த 1980 களில் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட டெசோ என்று பரவலாக அழைக்கப்பட்ட தமிழ்ஈழ ஆதரவாளர் அமைப்பு திடீரென மீண்டும் தி.மு.க.தலைவர் கருணாநிதியின் தலைமையில் உருவாக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

80களில் தனிஈழத்திற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்ட பல்வேறு ஆயுத குழுக்கள் இலங்கைக்குள் போராடிக் கொண்டிருந்தபோது அவர்களுக்கான தமிழ்நாட்டின் ஆதரவை ஒன்றுதிரட்டும் முகமாக உருவாக்கப்பட்ட டெசோ அமைப்புக்கு இன்றைய தேவை என்ன என்கிற கேள்விக்கு பதிலளித்த சுப வீரபாண்டியன், ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டம் தொடரும் வரை டெசோவுக்கான தேவையும் இருக்கிறது என்றார்.

2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான இறுதிப் போரின்போது தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த தி.மு.க.வும் அதன் தலைவருமான கருணாநிதியும் உரிய நடவடிக்கைகள் எடுக்காமல் இப்போது எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும்போது மட்டும் இலங்கை தமிழர்கள் விவகாரத்தில் அதிதீவிர நிலைப்பாடு எடுப்பது அரசியல். சந்தர்ப்பவாதமாகாதா என்கிற கேள்விக்கு பதிலளித்த சுப வீரபாண்டியன், ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக தி.மு.க.ஏந்த நடவடிக்கையும் எடுத்துவிடக்கூடாது என்கிற உள்நோக்கத்துடன் செயற்படுபவர்கள் தான் இப்படியான குதர்க்கமான கேள்வியை எழுப்புவதாக குற்றம்சாட்டினார்.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகவும் தனித் தமிழ் ஈழத்துக்கு ஆதரவாகவும் ஏனைய கட்சிகளும் ஏனைய இயக்கங்களும் போராடுவதை தாங்கள் தடுக்கவில்லை என்றும் அ.தி.மு.க. உள்ளிட்ட ஏனைய தமிழ்நாட்டு கட்சிகளும் அவரவர் மட்டத்தில் இதே கோரிக்கையை வலியுறுத்தலாம் என்றும் அவர் கூறினார். (அ-2)

## கப்பம்கோரும் முயற்சி முறியடிப்பு


ஆபிரிக்க நாடான கினியாவைச் சேர்ந்த ஒருவரை கடத்தி கப்பம் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை கல்சிஸை பொலிஸார் நேற்றைய தினம் முறியடித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடத்தப்பட்டவரை விடுவிப்பதற்கு 20 இலட்சம் ரூபா கப்பம் கோரப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கினியா பிரஜையின் நண்பரான நைஜீரிய பிரஜையொருவர் உள்ளூர் வாசியொருவருக்கு 20 இலட்சம் ரூபா கொடுக்க வேண்டியிருந்ததாகவும் அவர் அப்பணத்தை திருப்பிக் கொடுக்காத நிலையில் கினியா பிரஜையை குழுவொன்றுடன் இணைந்து உள்ளூர்வாசி கடத்தி பணத்தை தருமாறு கோரியதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.(அ-2)

## சூரியன் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள புதிய செயற்கைக்கோள் உருவாக்க முடிவு

### ஐரோப்பிய விண்வெளி விஞ்ஞானிகள் தகவல்



விண்ணில் உள்ள கிரகங்கள் குறித்து ஆய்வு நடைபெற்று வருகிறது. அதற்கான வடிவமைக் கப்பட்ட செயற்கை கோள்களை அனுப்பி அதன் மூலம் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். ஆனால் சூரியன் குறித்து இதுவர ஆய்வு மேற்கொள்ளவில்லை. ஏனெனில் ஏனைய கிரகங்களை விட சூரியன் கடுமையான வெப்ப கிரகமாகும்.

இந்த நிலையில் சூரியன் குறித்துஆய்வு மேற்கொள்ள புதிய வடிவிலான செயற்கைகோளை உருவாக்க ஐரோப்பிய விண்வெளி விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர். அதற்கான செயற்கைக்கோள் 2 ஆயிரம் கோடி செலவில் தயாரிக்கப்படுகிறது. அதற்கான பணி இங்கிலாந்தின் ஆஸ்டிரியம் நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்த திட்டத்தின் விஞ்ஞானி டேனியல் முல்லா கூறியதாவது,

பூமியை விட சூரியன் 8 மடங்கு வெப்பம் கொண்ட கிரகமாகும். எனவே 500 டிகிரி செண்டிகிரேடு வெப்பத்தை தாங்கக்கூடிய வகையில் உலோக கலவையிலான தகடுகளால் செயற்கைக்கோள் தயாரிக்கப்படுகிறது. அந்த செயற்கைக்கோள் 8 கன சதுரமீற்றர் அளவில் வடிவமைக்கப்பட உள்ளது. அதன் வெளிப்புற தகடு 30 சென்ரி மீற்றர் கனமாக இருக்கும். அதன்மீது வெப்பத்தை தாங்கக்கூடிய டைட்டானியம் உலோக கலவையிலான ஷீட் பொருத்தப்படும். சூரியனில் இருந்து வெளியாகும் காந்தபுயல் செயற்கைக்கோள்களின் தகவல் தொடர்பை பாதிப்பது குறித்தும் காந்த அலைகள் உருவாவது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளும்.

2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இது விண்ணில் செலுத்தப்படும். சூரியனுக்கு அருகே 4 1/2 கோடி கி.மீற்றர் தூரத்தில் அதாவது புதன் கிரகத்தின் அருகில் இது நிலை நிறுத்தப்பட்டு ஆய்வு நடத்தப்படும். இந்த செயற்கைக்கோள் தயாரிப்பதற்கான உதிரிப்பாகங்களை பல ஐரோப்பிய நிறுவனங்கள் வழங்க உள்ளன. இதில் அமெரிக்காவும் உதவ உள்ளது என்று தெரிவித்தார். (அ-2)

## 111 ஆவது வயதிலும் வாசிப்பதில் ஆர்வம் கொண்ட பெண்மணி

(கரவெட்டி)



வயோதிபப் பெண் ஒருவர் தனது 111 ஆவது வயதிலும் பத்திரிகைகள் வாசிப்பதில் பேரவா கொண்டு வாழ்ந்து வருகின்றார்.

இவ்வயோதிபப் பெண் 1901 ஆம் ஆண்டு வடமராட்சி கம்பர்மலை பாரதி வீதியில் பிறந்து அங்கேயே இன்று வரை வாழ்ந்து வருகிறார். இதில் கணபதி தங்கம் என்ற அவ் வயோதிப் பெண் மணிக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் ஐந்து பேரப்பிள்ளைகளும் 18 பூட்டப்பிள்ளைகளும் உள்ளனர்.

தற்போது தனது வேலைகளை தானே செய்து வரும் நிலையில் 1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் இடம் பெற்ற ஷெல் தாக்குதலில் இவரின் காது செவிப்புலனிழந்துள்ளது.

பத்திரிகை வாசிப்பதும் தனது பேரப்பிள்ளைகள் மற்றும் பூட்டப்பிள்ளைகளுடன் ஊர் சுற்றுவதும் இவரது விருப்பமென அவரது மகள் தெரிவித்துள்ளார்.

தற்போது மிகவும் சுறுசுறுப்பாக வாழ்ந்து வரும் வயோதிப் பெண்மணி தான் இன்னும் 5 ஆண்டுகள் வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் வாழ்ந்து வருவதாக தெரிவித்தார். (அ-3-24)

## பிரதமர் தேடும் படலத்தை ஆரம்பித்தார் ஜனாதிபதி?

(கொழும்பு)

பிரதமர் டி.எம்.ஜயரத்ன உடல்நிலை மோசமடைந்து வருவதாலும் அவருக்கு ஞாபக சக்தி குறைந்து வருவதாலும் பிரதமர் பதவிக்கு வேறொருவரை நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

எனினும் இதற்குப் பொருத்தமான ஒருவரைத் தெரிவுசெய்ய முடியாமல் இருப் பதால் அமைச்சரவை மாற்றம் தொடர்ந்தும் பிற்போட வேண்டிய நிலைய ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பசில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ ஆகிய சகோதரர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரில் எவருக்கும் பிரதமர் பதவியை வழங்குவதில்லை என்ற தீர்மானத்தில் ஜனாதிபதி இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிரதமர் பதவிக்குப் பொருத்தமான நபரை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து தெரிவு செய்ய முடியாது போனால் ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் தினேஷ் குணவர்த்தனவிற்கு அந்தப் பதவியை குறுகிய காலத்திற்கு வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

அத்துடன் அடுத்த மாதமளவில் அமைச்சரவையில் மாற்றம் செய்யவும் ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளதாக அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் பிரதமர் டி.எம்.ஜயரட்ன பதவி விலக வேண்டுமென இஸ்லாமிய ஒருமைப்பாட்டு முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது. பிரதமர் டி.எம்.ஜயரட்ன சமய விவகார அமைச்சராகவும் கடமையாற்றி வருகின்றார்.

ஜயரட்ன உடனடியாக சமய விவகார அமைச்சுப் பொறுப்பை இராஜினாமா செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் அமைச்சரின் செயலாளரும் பதவி விலக வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களுக்கு பிழையான தகவல்கள் வெளியிடப்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

## முல்லைத்தீவு மாவட்டத்தின் நெற் கொள்வனவில் சிரமம்

### அரச அதிபர் தெரிவிப்பு

முல்லைதீவு மாவட்டத்தின் நெற் கொள்வனவை சீராக முன்னெடுப்பதில் சிரமம் ஏற் பட்டுள்ளது.

போதிய களஞ்சிய வசதி இல்லாமையால் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக அரசாங்க நிர்ணய விலையில் நெல் கொள்வனவு இடம் பெறுவதாக அவர் கூறினார்.

ஏற்கனவே சுமார் 50 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் கையிருப்பில் உள்ளதாக குறிப்பிட்ட அவர் இந்த போகத்தில் இதுவரை 623 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 116



யூக்கொஸ்லாவியாவின் தலைவர் டிற்றோ தனது நாட்டின்மீதான எதிரியின் தாக்குதலின்போது • மறைந்திருந்த குகை-1944



யூக்கோஸ்லாவியாவின் தலைவர் டிற்றோ தனது நாட்டின்மீதான எதிரியின் தாக்குதலின்போது மறைந்திருந்த அதே குகை தற்பொழுதும் பராமரிப்பில்

நடைமுறையில் ஜேர்மனுக்கு உதவி வந்ததை சோவியத் அரசாங்கம் 3 வருடங்களுக்கும் மேலாக பொறுத்துக்கொண்டது. ...பல்கேரியா அனுகூலமான தருணத்தைப் பயன்படுத்தி ருமேனியாவையும் பின்லாந்தையும் பின்பற்றி ஜேர்மனிக்கு ஆதரவான கொள்ளையைக் கைவிடும், ஜேர்மனியுடன் உள்ள உறவுகளை அறுத்துக்கொண்டு ஜனநாயக நாடுகளின் ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியில் சேரும் என்று எதிர்பார்த்திருக்கலாம்... என்றாலும் இப்போதுகூட ஜேர்மனியுடன் துண்டித்துக்கொள்ள பல்கேரிய அரசாங்கம் மறுக்கிறது. நடுநிலை என்றழைக்கப்படும் கொள்கையைப் பின்பற்றுகிறது; இதன் பயனாய் அது சோவியத் யூனியனுக்கு எதிராக ஜேர்மனிக்குத் தொடர்ந்து நேரடியாக உதவி வருகிறது.

இதனால், பல்கேரியாவுடன் உறவுகளை மேற்கொண்டு தொடருவது சாத்தியமில்லையென சோவியத் அரசாங்கம் கருதி, பல்கேரியாவுடன் உள்ள எல்லாஉறவுகளையும் முறித்துக் கொள்கிறது. சோவியத் யூனியனுக்கு எதிராக பல்கேரியா யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதோடு கூட பல்கேரி

உடனடியாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

ஆனால், பல்கேரிய அரசாங்கம் அதற்களிக்கப்பட்ட வாய்ப்பை பயன்படுத்தவில்லை. செப்ரெம்பர் 6 ஆம் திகதி அது 2 முரண்பாடான அறிக்கைகளை வெளியிட்டது. முதல் அறிக்கையில் அது பாசிச ஜேர்மனியுடன் உள்ள உறவுகளை முறித்துக் கொள்ளும் முடிவை தெரிவித்து சமரசத்திற்கு வருமாறு சோவியத் யூனியனிடம் வேண்டியது. இரண்டாவது அறிக்கையில், சமரசத்திற்கு வருமாறு சோவியத் அரசாங்கத்திடம் கோரியுள்ளதாக மட்டும் அறிவித்தது, பாசிச ஜேர்மனியுடன் உள்ள தொடர்புகளை முறித்துக்கொள்ளும் பிரச்சினை குறித்து பரிபூரண மௌனம் சாதித்தது. ஹிட்லர் படைகளுக்கு பல்கேரியாவில் புகலிடம்அளித்து முன்போன்றே பாசிச ஜேர்மனிக்கு ஆதரவு தர பல்கேரிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்பதற்கு இது சான்றாக அமைந்த்து.

ஆளும் பாசிச பல்கேரிய கும்பலுக்கு எதிராக சோவியத்யூனியன் யுத்தப்பிரகடனம் செய்ததை பல்கேரிய மக்கள் திருப்தியோடு வரவேற்றனர். பல்கேரிய பாசிஸ்டுகளும் ஹிட்லர் ஆக்கிரமிப்பாளர்களும் நாட்டில் தலைவிரித்தாடியதற்கு இது முடிவு கட்டும் என்று அவர்கள் நம்பினர்.

செப்ரெம்பர் 5 ஆம் திகதி பல்கேரிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பொலிட்பீரோ கூட்டத்தில் எழுச்சியைப்பற்றிய முடிவான திட்டம் தீட்டப்பட்டது. அடுத்த நாள் முழு பிரதேசங்க ளையே கைப்பற்றி அங்கே தாய் நாட்டு முன்னணியின் ஆட்சியை நிலை நாட்டின.

செப்ரெம்பர் 8 ஆம் திகதி 3-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் ஜூர்ஜுமன்காலிய பகுதியில் ருமே னிய- பல்கேரிய எல்லையைக் கடந்து நாளின் இறுதியில் ரூஸ் துர்துகாய், சிலீஸ்திரியா, தோப்ரிச் மற்றும் கருங்கடலோர துறைமுக நகராகிய வார்னா ஆகியவற்றை விடுவித்தன.

சோவியத்இராணுவத்தின் விடுதலைப்பணியில்சந்தேகம் கொள்ளாத பல்கேரிய போர்வீரர்கள் எவ்வித எதிர்ப்பையும் காட்டவில்லை. பல்கேரிய மக்கள் தம்மை விடுவிக்க வந்தவர்களை உற்சாகமாக, மலர்களோடும் செம்பதாகைகளோடும் வரவேற்றனர். இரண்டாவது முறையாக (1778இல் துருக்கிய ஆதிக்கத்திலிருந்தும் 1944 இல் ஹிட்லர் கொடுமையிலிருந்தும்) ருஷ்யப் போர்வீரர்கள் பல்கேரியாவை அந்நிய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தனர்.

செப்ரெம்பர் 9 ஆம் திகதி பல்கேரிய மக்கள் நாட்டில் கோலோச்சிய பாசிச ஆட்சியை தூக்கியெறிந்து தாய் நாட்டு முன்னணி அரசாங்கத்தை ஏற்படுத்தினர். இது பாசிச ஜேர்மனியுடனான தொடர்புகளை அறுத்து அதற்கு எதிராக யுத்தத்தை அறிவித்தது.

அதே நாளன்று 3-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் ரஸ்கிராத் நகரைப்பிடித்தன. இங்கே 4 ஆயிரம்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

1944 செப்ரெம்பர் 3 ஆம் திகதி 3-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் ருமேனிய-பல்கேரிய எல்லையை அடைந்ததன. செப்ரெம்பர் 5 ஆம் திகதி சோவியத் அரசாங்கம் பல்கேரிய அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பை அனுப்பியது. அதில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. “சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்தில் பல்கேரியாவுக்கு எதிராக சோவியத் யூனியனும் யுத்த நிலையில் இருக்கும் என்று அறிவிக்கிறது” என்று மேற்கொண்டு அக்குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

சோவியத் யூனியன் யுத்தத்தை அறிவித்தாலும்கூட, ஹிட்லர் ஜேர்மனியுடன் உள்ள தொடர்பை முறித்துக் கொள்ள அப்போதைய பல்கேரிய அரசாங்கத்துக்கு வாய்ப்பளிக்கும் முகமாக பல்கேரியாவிற்கு எதிராக பல்கேரிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியும் தாய் நாட்டு முன்னணியின் தேசியக் கமிட்டியும், பாசிச ஆதரவு முராவ்லெவ் அரசாங்கத்தை தூக்கி எறியும் போராட்டத்திற்கு தாய்நாட்டு முன்னணி அரசாங்கத்தை அமைக்கவும் மக்களுக்கு அறை கூவல்விடுத்தன. நாடு முழுவதும் வெகுஜன வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் வெடித்தன. பல நகரங்களில் இவை மக்களுக்கும் பொலிசுக்கும் இடையிலான ஆயுத மோதல்களாக மாறின. பல்கேரிய போர்வீரர்கள் தாய் நாட்டு முன்னணியின் தரப்புக்கு மாறிவருவத, குறிப்பாக சோவியத் இராணுவம் பல்கேரியாவினுள் நுழைந்ததை அடுத்து பெருமளவில் நடைபெற்றது.



பல்கேரிய- ஜேர்மனி இராணுவ ரெயிமென்டின் இரவுபோசனம்

பல்கேரிய மக்கள் விடுதலை இராணுவத்தின் கெரில்லாப்படை பிரிகேடுகள் பாசிச ஜேர்மனிய துருப்புகளுக்கு எதிரான தாக்குதலில் இறங்கின. இவை




ஜூ.எஸ். இரணுவமான கிளார்ட் ஹெறன்சிங்கர் என்ற விமானியின் பரசூட் ஆன, பெண்களின் திருமண உடை- இவர் ஜப்பானின்மீது பறக்கும் போது இவரது விமான எந்திரம் தீப்பிடித்தது, அதன்போது இதுவே இவரைக்காப்பாற்றியது- இதையே இவர்தனது நண்பிக்கு பின்னாளில் திருமணத்தின்போது கொடுத்தார் இப் பொழுதும் இவருது குடும்பம் இதை பாதுகாத்துவருகிறது

பாசிச ஜோமனியப் போர்விரர்களும் இராணுவ அதிகாரிகளும் சிறைப் பிடிக்கப்பட்டனர். இத்துருப்புகள் கருங்கடல் கப்பற்படையுடன் சேர்ந்து கருங்கடலில் உள்ள பெரிய துறை முக நகராகிய புர்காசை கைப்பற்றின. இப்போது துருக்கிய எல்லை வரை கருங்கடலின் கரைப்பகுதி பூராகவும் கருங்கடல் கப்பற்படையின் கட்டுப் பாட்டிற்குக் கீழிருந்தது. (தொடரும்)


# அதிசய உலகம்...

## உலக சாதனை படைத்த சீன மாணவர்களின் சிரிப்பு முகம்



சீனாவில் நான்ஜிங் வேளாண்மை பல்கலைக்கழக மாணவர்கள் 3 ஆயிரத்து 110 பேர் அங்குள்ள மைதானத்தில் திரண்டு சிரிப்பு முகம் போன்ற தோற்றத்தை உருவாக்கி புதிய உலக சாதனை படைத்தனர். மேலும் இதற்கு முன்பு கனடா நாட்டைச் சேர்ந்த 2961பேர் கடந்த 2011 ஆம் ஆண்டு இது போன்ற நிகழ்ச்சியை நடத்தியது குறிப்பிடத்தக்கது. தற்போது அந்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

## ஜிம்னாஸ்டிக்கில் அசத்தும் 82 வயது வயோதிபர்




ஸ்கொட்லாந்து Lenno xtown என்ற இடத்தில் வசித்து வரும் 82 வயதான Mr Rodger என்பவர் ஜிம்னாஸ்டிக் விளையாட்டில் அசத்தியுள்ளார்.

3 முறை ஜிம்னாஸ்டிக் சம்பியனாக வலம் வந்த இவர் தனது 20 வயதிலிருந்தே இவ்விளையாட்டில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

மேலும் இவர் ஜிம்னாஸ்டிக்கில் இன்னும் பலவித விளையாட்டு வித்தைகளையும் கொண்டுள்ளார்.

தன்னைப் பற்றி கருத்து தெரிவிக்கையில், தான் 60 ஆண்டுகாலமாக இப்பயிற்சியினை மேற்கொண்டதனால் இப்பொழுதும் என்னால் நன்கு விளையாட முடிகிறது என்று தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானில் மூன்று கைகளுடன் குழந்தை



பாகிஸ்தானில் மூன்று கைகளுடன் பெண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. தற்பொழுது ஆபத்தான கட்டத்தில் குழந்தை இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். மில்லியனில் ஓர் குழந்தையே இவ்வாறு மேலதிக உறுப்புகளுடன் பிறப்பதாக தெரிவித்துள்ளனர்.

மூன்றாவது கை குழந்தையின் முள்ளந்தண்டுக்கு அண்மையில் இருப்பதால் அதை அகற்றுவதில் குழந்தைக்கு ஆபத்து இருப்பதாக மருத்துவர்கள் தரப்பால் அஞ்சப்படுகிறது.

கடந்த வாரம் பாகிஸ்தானில் மேலதிக கால்களுடன் பிறந்த ஆண் குழந்தை அறுவைச்சிகிச்சை மூலம் மேலதிக கால்கள் அகற்றப்பட்ட நிலையில் தற்போது புரண சுகத்துடன் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

## முஸ்லிம் காங்கிரஸ் ஐ.தே.க.வுடன் பேச்சுவார்த்தை நடத்தத்திட்டம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

தம்புள்ள சம்பவத்தை தொடர்ந்து ஆளும் கட்சியிலிருந்து விலகிக் கொண்டால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஏற்கனவே உத்தியோக பற்றற்ற ரீதியில் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர, ஜோன் அமரதுங்க மற்றும் சிரேஸ்ட உறுப்பினரான மலிக் சமரவிக்ரம ஆகியோர் இந்தப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்று வருவதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சிக்கு அளித்து வரும் ஆதரவினை வாபஸ் பெற்றுக்கொண்டால் சில ஆளும் கட்சி முஸ்லிம் அமைச்சர்கள் சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை முஸ்லிம் வர்த்தகர்களும் சில தூதுவராலயங்களும் ஆளும் கட்சியை விட்டு விலகுமாறு முஸ்லிம் அமைச்சர்களுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## ஈரானின் கலாசார ஆலோசகர் அரசுடன் கலந்துரையாடினார்

ஈரானின் உயர்மட்ட கலாசார ஆலோசகரும் ஆன்மீக பிரமுகருமான அயதுல்லா மொஹமட் அலி தஸ்கிரி நேற்று முன்தினம் தம்புள்ள நெருக்கடி நிலைமை தொடர்பாக அரசாங்கத்துடன் கலந்துரையாடியுள்ளார்.

இஸ்லாமிய மதப்பிரிவுகளுக்கு இடையிலான நெருக்கம் என்ற தொனிப்பொருளில் கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றின் போது அவர் பிரதமர் டி.எம். ஜயரட்னவை சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கை மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையிலான மதம் மற்றும் சகோதர ரீதியான உறவுகளை நினைவு கூர்ந்தார். இது தவிர தம்புள்ளவில் பள்ளிவாசல் அமைவிடம் தொடர்பாக எழுந்துள்ள அசாதாரண நிலை குறித்து ஆராயுமாறும் பொதுமக்கள் மத்தியில் நல்லுறவை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் முனைப்புக்களை காட்ட வேண்டும் என்றும் அயதுல்லா வலியுறுத்தியுள்ளார்.

இதனை பிரதமர் நேரடியாக தலையிட்டு உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். (அ-2)

## மசகு எண்ணெய் விநியோகத்தை இந்தியாவிடம் ஒப்படைக்கவில்லை

### ஜே.வி.பி.யின் கருத்துக்கு சுசில் மறுப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான மசகு எண்ணெய் இறக்குமதிப் பணிகளை இந்திய ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கு முழுமையாக கையளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜே.வி.பி யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

அணுவாயு உற்பத்தியில் ஈடுபடுவதாக குற்றம் சுமத்தி ஈரானை ஓரங்கட்டி வரும் அமெரிக்கா, 6 மாதங்களுக்குள் ஈரானில் இருந்து மசகு எண்ணெய் இறக்குமதிகளை கட்டுப்படுத்துமாறு இலங்கை உட்பட்ட நாடுகளை கோரியிருக்கிறது.

இந்தியா இதற்கு உடன்படாத போதும் இலங்கைக்கு அமரிக்காவை எதிர்க்கும் வலு இல்லாமையால் ஈரானில் இருந்து மசகு எண்ணெய் இறக்குமதியை தடை செய்ய முடிவெடுத்துள்ளது.

இதனையடுத்தே சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கான மசகு எண்ணெய் விநியோகத்தை ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கு கையளிக்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும் அதனை அரசாங்கம் மறுத்துள்ளது. தொடர்ந்தும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமே மசகு எண்ணெய் இறக்குமதியை மேற்கொள்ளும் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (அ-2)

## மிகப்பெரிய வர்த்தக மைய கட்டடப்பணிகள் ஆரம்பம்

சிங்கப்பூரின் கட்டட நிபுணரான எஸ்பி தாவோவின் நிறுவனத்தினால் இலங்கையில் பாரிய வர்த்தக மையம் இந்த வருட இறுதியில் தமது கட்டடப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

ஹெவ்லொக் சிட்டி என்று அழைக்கப்படும் இந்த இரண்டு மாடிக் கட்டடங்களில் வர்த்தக மையங்கள் 5இலட்சத்து 60 ஆயிரம் சதுர அடி உய ரத்தில் அமைக்கப்படவுள்ளன.

இதனைத் தவிர 7 இலட்சத்து 50 ஆயிரம் சதுர அடி உயரத்தில் இரட்டைக் கோபுர அலுவலக கட்டடங்களும் அமைக்கப்படவுள்ளன.

இந்தக் கட்டடப் பணிகளை 2012 ஆம் ஆண்டு மூன்றாவது காலாண்டு பகுதியில் ஆரம்பிப்பதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இதில் 6 சில்லறை வர்த்தக மாடிகளும் 20 அலுவலக மாடிகளும் திரைப்பட மற்றும் சிற்றூண்டிச்சாலைகளும் அமைக்கப்படவுள்ளன.

இந்தக் கட்டடப் பணிகள் 2016 ஆம் ஆண்டு நிறைவு பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டடத்தில் அமையவுள்ள 225 வீடுகளில் 216 வீடுகள் ஏற்கனவே விற்பனை செய்யப்பட்டுவிட்டன.

இந்தக் கட்டடத்தின் மூலம் சிங்கப்பூரின் டாவோ நிறுவனம் 2 ஆயிரத்து 491 மில்லியன் ரூபாய்களை வருமானமாக எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# பெண்களுக்கு நிகரான ஆண்களின் சராசரி வீழ்ச்சி

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் மன்னார் தவிர ஏனைய மாவட்டங்களில் ஆண்களின் விதிதாசாரம் யுத்தம் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக புள்ளி விபரவியல் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

2011 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபரவியல் திணைக்கள அறிக்கையிலேயே இவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் 100 பெண்களுக்கு 92.9 என்ற சராசரியிலேயே ஆண்களின் விகிதம் உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 100 பெண்களுக்கு 90.4 ஆண்களுக்கு மன்னார் மாவட்டத்தில் 100 பெண்களுக்கு 100 ஆண்களும் வவுனியா மாவட்டத்தில் 100 பெண்களுக்கு 95 ஆண்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 100 பெண்களுக்கு 96 ஆண்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 100 பெண்களுக்கு 95 ஆண்களும் என இச்சராசரி உள்ளது.

இவ்வாறு ஆண்களின் சனத்தொகை வீழ்ச்சியடைந்ததற்கு பிரதான காரணமாக யுத்தம் காரணமாக பலர் மரணமடைந்தும் வெளிநாடுகளுக்கு சென்றதுமே என தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# தமிழீழத்தை உருவாக்க மீண்டும் உருவாகிறது டெசோ

(கொழும்பு)

தி.மு.க.தலைவர் கலைஞர் மு.கருணாநிதி தலைமையில் தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பு (டெசோ) உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முதல் கலந்துரையாடல் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று நடைபெறுகிறது.

இலங்கையில் தனி ஈழம் அமைய வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு அமைப்புக்கள் வலியுறுத்தி வருகின்றது.

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி மீண்டும் டெசோ அமைப்பை உருவாக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தார். இந்த நிலையில் தி.மு.க.தலைவர் கலைஞர் தலைமையில் தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பு (டெசோ) உருவாக்கப் பட்டுள்ளது.

இது குறித்து தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பு சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில் ,

தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பின் (டெசோ) முதல் கலந்துரையாடல் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் வருகிற 30 ஆம் திகதி (திங்கட்கிழமை) காலை 10.30 மணி அளவில் அமைப்பின் தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் டெசோ அமைப்பின் உறுப்பினர்களான தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, திராவிடர் இயக்க தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன், சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. (அ-2)

# கட்டாக்காலிகள் தொல்லை அதிகரிப்பு

(கனகபுரம்)

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை வளாகத்தினுள் நாட்டப்பட்டுள்ள பயன்தரு மரங்கள் மற்றும் பூ மரக்கன்றுகள் என்பன கட்டாக்காலி கால்நடைகளினால் நாசம் செய்யப் படுவதாக வைத்திசாலை நலன் விரும்பிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இரவு நேரங்களில் வைத்திய சாலை வளாகத்தினுள் மாடுகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப் படுகிறது.

காவலர்கள் இருந்தும் இக் குறித்த கால்நடைகள் உள்நுழைந்து பயன்தரும் மரங்களை நாசம் செய்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த கால்நடைகளின் உரிமை யாளர்கள் இத் தகவலை கவத்தில் கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (அ-9-259)

# 2012.04 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 313-ரோமப் பேரரசின் மன்னன் லிசினியஸ் அனைத்து கிழக்கு ரோமப் பேரரசையும் ஒன்றாக்கி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.

★ 1006-மிகவும் ஒளி கூடிய சுப்பர் நோவா எஸ்.என். 1006 லூப்பஸ் என்ற விண்மீன் கூட்டத்தில் அவதானிக்கப்பட்டது.

★ 1483-இந்த நாளில் புளூட்டோ நெப்டியூனின் சுற்றுவட்டத்துள் வந்தது. இது அங்கு ஜூலை 23, 1503 ஆண்டு வரை அங்கு இருந்தது.

★ 1803- ஐக்கிய அமெரிக்கா லூசியானா மாநிலத்தை பிரான்சிடம் இருந்து 15 மில்லியன் அமெரிக்க டொலருக்கு வாங்கியது.

★ 1838- நிக்கராகுவா மத்திய அமெரிக்கக் கூட்டமைப்பில் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1900-ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பகுதியானது.

★ 1945-அடொல்ஃப் ஹிட்லர் தனது மனைவியுடன் தற்கொலை செய்து கொண்டார். சோவியத் படையினர் பெர்லினில் ஜேர்மனிய நாடாளுமன்றில் செங்கொடியை ஏற்றினர்.

★ 1975-வியட்நாம் போர்: கம்யூனிசப் படைகள் சாய்கோன் நகரைக் கைப்பற்றினர். தென் வியட்நாமியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்ததில் வியட்நாம் போர் முடிவுக்கு வந்தது.

★ 1982- திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

★ 1993-ஜெனீவாவில் ஐரோப்பிய அணுக் கருவியல் ஆய்வு அமைப்பில் உலகளாவிய வலையமைப்பு பிறந்தது.

★ 1999-ஆசியான் அமைப்பில் கம்போடியா இணைந்து கொண்டது.

★ 2006-ஆப்கானிஸ்தானில் தலிபான்களால் கடத்தப்பட்ட சூரியநாராயணா என்ற இந்தியப் பொறியியலாளர் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

**பிறப்புக்கள்**

★ 1870- தாதாசாஹெப் பால்கே, இந்திய திரைப்படத்துறையின் முன்னோடி (இ.1944)

★ 1959- சிரீபன் கார்ப்பர், கனடாவின் 22 ஆவது பிரதமர்

★ 1961- ஐசேயா தாமஸ், முன்னாள் அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

★ 1945-அடொல்ஃப் ஹிட்லர், ஜேர்மனியை ஆண்ட ஆஸ்திரிய சர்வாதிகாரி (பி.1889)

★ 1961-லோங் அடிகள், யாழ்ப்பாணத்தில் பணி புரிந்த அயர்லாந்து அடிகள் (பி.1896)

**சிறப்பு நாட்கள்**

★ வியட்நாம் சுதந்திரதினம் (1975)

★ மெக்சிக்கோ-சிறுவர் தினம்



★ 1777-கணிதவியலாளர் கார்ல் ஃப்ரெடெரிக்காஸ் பிறந்த தினம் (இ.1855)







உலக மலேரியா தினத்தையொட்டி அண்மையில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி சமூக சேவைகள் பணியாளர் ஒருவருக்கு நியமனக் கடிதம் வழங்குவதையும் பேரணி இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# தமிழர்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகளை மதித்து நடத்தலே இலங்கைக்கு உள்ள ஒரேதீர்வு

**இந்தத் தீவில் காலாதி காலமாக வாழ்ந்து வரும் தமிழ் மக்களுக்கு அவர்களது உரிமைகளை இலங்கை அரசாங்கமோ அல்லது சிங்கள மக்களோ வழங்க வேண்டிய தேவையில்லை. சிங்களமக்களைப்போலவே தமிழ்மக்களும் இலங்கைத் தீவின் குடிமக்கள். ஆகவே சிங்களவர்கள் தமது உரிமைகளை அனுபவிப்பது போன்று இலங்கைத் தமிழ் மக்களும் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கு சட்டம் இடங்கொடுக்க வேண்டும்.**

மேற்குறிப்பிட்டவாறு கொழும்பில் இருந்து வெளியாகும் *த சண்டே லீடர்* என்ற ஆங்கல வார ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில்மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

அண்மையில் இந்திய எதிர்க்கட்சித் தலைவர் சுஸ்மா சுவராஜ் தலைமையில் 12 இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் குழு, இலங்கைக்கு வருகை தந்திருந்தமையானது, குதிரை லயத்தை விட்டுச் சென்ற பின்னர் 'அதன் கதவுகளை மூடுகின்ற செயலுடன் ஒப்பிடப்படுகிறது. அதாவது, இவ் இந்தியக் குழுவின் இலங்கை வருகையானது காலந் தாழ்த்தி மேற்கொள்ளப்பட்ட சம்பவம் எனக் கருதப்படுகிறது.

தற்போது சிதைந்துபோயுள்ள இந்தோ-இலங்கை உறவை எவ்வாறு மீளவும் புதிப்பிக்க முடியும்? இவ்விரு நாடுகளுக்கும் இடையில் ஏற்கனவே பேணப்பட்ட உறவானது சில காரணங்களின் நிமித்தம் மீளவும் புதுப்பிக்கப்படும் என இருநாட்டு ஆய்வாளர்களும் நம்பிக்கை கொள்கின்றனர்.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற போது சிறிலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு மிக நெருக்கமாக இருந்தது. ஆனால், விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இலங்கை அரசாங்கம் தான் பெற்றுக் கொண்ட வெற்றியை அறிவித்ததன் பின்னர் கடந்த மூன்று ஆண்டுகளில் இவ்விரு நாடுகளுக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டு வருகிறது என்பது கண்கூடு. இந்திய மத்திய அரசாங்கத்தின் உயர்பீட அதிகாரிகள் மற்றும் ஆட்சியாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் கீழ்ப்படிந்து நடந்ததுடன், இந்திய மத்திய அரசு தனது உதவிக் கரத்தை சிறிலங்காவுக்கு வழங்கியிருந்தது.

கடந்த வாரத்தில் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்தியநாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழுவிடமிருந்து எதிர்பர்க்கப்படுவது என்ன? தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி ஆகியோர் தமது கட்சிப்பிரதிநிதிகளை இலங்கைக்குச் சென்ற இந்திய நாடாளுமன்றக் குழுவிலிருந்து நீக்கியமையானது, உண்மையில் இலங்கைக்கு வீழுந்த அடியாக உள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்தின்போது தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர்,தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா ஆகிய இருவரும் இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்வதில் தமக்

**நன்றி:இணையம்**

கிடையே முண்டியடித்துக் கொண்டதுடன் இலங்கை விவகாரத்தை தமிழ்நாட்டு அரசியலில் முக்கியத்துவப்படுத்தி அதன் மூலம் மக்களின் ஆதரவைப்பெற்றுக்கொள்ள முனைகின்றனர். அத்துடன் இலங்கை விவகாரம் தொடர்பாக தமக்கிடையே போட்டி போட்டுக்கொள்ளும் இவ்விரு தமிழ் நாட்டுத் தலைவர்களும் இதன் மூலம் தமது வாக்காளர்களின் நம்பிக்கையை மேலும் அதிகரித்துக் கொள்வதற்கான போட்டியில் இறங்கியுள்ளனர்.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான உறவைப்பலப்படுத்தி, மேலும் முன்னேற்றும் நோக்குடன் தற்போது இந்திய நாடாளுமன்றக்குழுவினர் இங்கு வருகைதந்த நிலையில், தமிழ் நாட்டின முக்கிய இரு பிரதான கட்சிகளின் பிரதிநிதிகள் இக்குழுவில் பிரசன்னமாகியிருக்கவில்லை. இந்நிலையில், இவ் இந்தியக் குழு இலங்கை வருகை தந்ததற்கான நோக்கம் அடையப்பட்டுள்ளதா என்ற கேள்வி எழுகின்றது. யுத்த நடவடிக்கையில் அகப்பட்டு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பாக இலங்கைக்கு வருகை தந்த இந்தியப்பிரதிநிதிகள் விசாரணை செய்யவுள்ளனர். அத்துடன் கடந்த மூன்று ஆண்டுகளாக சிறிலங்காவில் நிலவும் அமைதிச் சூழலில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் மக்கள் எவ்வாறான விலைகளைக் கொடுத்துள்ளனர். என்பது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

பல பத்தாண்டுகளாக யுத்தத்துக்குள் அகப்பட்டுக்கொண்ட தமிழ்மக்கள் தமது அன்பக்குரியவர்களை இழந்து, தமது வீடுகளை இழந்து, காயப்பட்டு, சொல்லொணா துன்பங்களை அனுபவிக்கின்ற நிலையில், தமது வாழ்வில் தாம் திருப்தியாகவும் மகிழ்வாகவும் வாழ்வதாக கூறுவார்கள் என இலங்கைக்கு பயணம் செய்திருந்த இந்தியப் பிரதிநிதிகள் எதிர்பார்த்திருக்க முடியாது.

இலங்கை அரசாங்கமானது நிலக் கண்ணிவெடிகளை அகற்றி பல ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றிய போதிலும், இன்னமும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத மக்களும் உள்ளனர். அத்துடன் காணாமற்போதல், பொதுமக்கள் உயிரிழப்பு, விசாரணைகள் எதுவுமின்றி சந்தேக நபர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படுதல் தொடர்ந்தும் நடைபெறுவதாக ஐ.நா.செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட வல்லுனர் குழுவின் அறிக்கையிலும் இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இந்தியக் குழு கோரியிருந்தது.


இலங்கையில் யுத்தம் முடிந்த பின்னர் மேற்கொள்ளப்பட்டுவரும் பாரிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் மட்டுமே இலங்கை அரசாங்கத்துக்கு பெருமை தேடிக்கொடுக்கின்றன.பல பத்தாண்டுகளாக செய்கை பண்ணப்படாத விவசாய நிலங்களில் தற்போது பயிர்ச்செய்கை மெற்கொள்ளப்படுகின்ற அதே வேளையில் , வடக்கு கிழக்கில் வாழும் இளையோர் நிரந்தர வருமானத்தை ஈட்டித் தரும் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

இலங்கையின் எல்லாப்பாகங்களிலும் உள்ள இளைஞர்களும் விவசாயத்தில்ஈடுபடுவதை விரும்பவில்லை. அவர்களைப்பொறுத்தவரை தொழிற்சாலைகளில் அல்லது அலுவலகங்களில் பணிபுரிவதையே விரும்புகின்றனர். யுத்தத்தால் அழிவடைந்த பிரதேசங்களில் கடந்த மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள், தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்றவற்றை மீளப்புனரமைக்கும் திட்டங்கள் மூலம் தற்போது இலங்கைக்கு பயணம்செய்திருந்த இந்திய நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழுவை இலங்கை அரசாங்கத்தால் திருப்திப்படுத்த முடிந்ததா?

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கோரிக்கைகள் இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டு இலங்கையில் நிலவும் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு தேட முடியுமா? எனவும் கேள்வி எழுப்பப்படுகிறது. தமிழ்மக்களின் அரசியல் அவாக்களை வெளிநாடுகளால் இலங்கையில் முதலீடுசெய்யப்படும் பல பில்லியன் டொலர்களால் பூர்த்திசெய்து கொள்ள முடியாது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் அரசியற் தீர்வு மூலம் மட்டுமே நிறைவேற்றப்படமுடியும்.

தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்குதல் என்றே இலங்கை அரசாங்கமும், சிங்கள மக்களும் எண்ணுகின்றனர் ஆனால், உண்மையில் இலங்கைத்தீவில் குடியுரிமை பெற்று இத் தீவில் காலாதிகாலமாக வாழ்ந்து வரும் தமிழ்மக்களுக்கு அவர்களது உரிமைகளை இலங்கை அரசாங்கமோ அல்லது சிங்கள மக்களோ *வழங்க* வேண்டிய தேவை இல்லை. சிங்கள மக்களைப் போலவே தமிழ் மக்களும் இலங்கைத் தீவின் குடிமக்கள் ஆகவே சிங்களவர்கள் தமது உரிமைகளை அனுபவிப்பது போன்று இலங்கைத் தமிழ் மக்களும் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கு சட்டம் இடம் கொடுக்க வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தளவில் தனது நாட்டில் நிலவும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இந்திய அரசாங்கத்தினதோ அல்லது அமெரிக்காவினதோ அல்லது பிரித்தானியாவினதோ அல்லது வேறெந்த மேற்குலக நாடுகளினதோ அங்கிகாரமோ



அல்லது ஆசீர்வாதமோ தேவையில்லை. இலங்கையானது தனது நாட்டில் நிலவும் தேசிய பிரச்சினையை தானாக தீர்த்துக்கொள்ள முடியும். அதாவது தனது நாட்டில் வாழும் தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரித்து அவர்களை குடிமக்களாக ஏற்று சமமாக நடத்துவதற்கு ஏதுவான வழிமுறைகளை உருவாக்கி அதன் மூலம் தேசிய பிரச்சினையை தீர்த்துக்கொள்ள முடியும். ஒரு தேசத்தை நசுக்குவதில் இறுதி ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்ற சிறுபான்மையினரின் பிரச்சினையைப் போல இலங்கையில் வாழும் தமிழ்மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படாது இழுத்தடிக்கப்படும் போது உலகின் வல்லரசு நாடுகள் ஏனைய நாடுகளை அடக்கி, நசுக்குவதைப்போல இலங்கைத்தீவிலும் தமது அதிகாரத்தை நிலை நிறுத்துவர்.

இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட யுத்த மீறல்களை காரணம்காட்டி இலங்கை மீது பொருளாதாரத்தடை விதிக்கவேண்டும் என தற்போது முதலமைச்சர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார். ஈழப்பிரச்சினை தொடர்பாக இலங்கையில் கருத்து வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி கோரிக்கை விடுக்கின்றார். இதேவேளையில் இலங்கையின் கரையோரத்திலிருந்து மிகக்குறுகிய தூரத்திலுள்ள தமிழ் நாட்டின் கூடங்குளத்தில் அணுமின் நிலையத்தை இயக்கும் முயற்சியில் இந்தியா இறங்கியுள்ளது.

புகுசீமாவில் ஏற்பட்ட அணுக்கசிவின் பின்னர் ஜேர்மன் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள்கூடத் தமது நாடுகளில் அமைக்கப்பட்ட அணுமின் நிலையங்களை குறைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுவரும்போது கூடங்குளத்தில் அதாவது பாக்குநீரிணைக்கு அருகே, இலங்கைக்கு மிக நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ள அணுமின் நிலையம் தொடர்பில் இலங்கையிலுள்ளவர்கள் எவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. கூடங்குள அணுமின்நிலையத்தில் அணுக்கசிவு ஏற்படும்பட்சத்தில் இலங்கை முழுவதும் அணுக்கருத்தாக்கத்துக்கு உட்பட்டுவிடும். இவ்வாறானதொரு அபாயம் நிலவுகின்றன நிலையில் இலங்கையர்கள் எவரும் இதுதொடர்பாக வாய்திறக்காது உள்ளனர். தீவிர பௌத்த சிங்கள தேசிய வாதியென தன்னைத்தானே அறிவித்துக் கொள்ளும் சம்பிக் ரணவக்ககூட கூடங்குளம் அணுமின்நிலையம் தொடர்பாக தனது எதிர்ப்பை காட்டவில்லை. ஜெனீவா கூட்டத்தொடரின் பின்னர் இந்தியாவுடனான மீளிணக்கப்பாட்டிற்கான விலையாக இதற்கான எதிர்ப்பு காட்டப்படவில்லையா?

இலங்கையர்களாகிய நாங்கள் எமது சொந்த உரிமைகளை நாமாகவே கையாண்டு கொண்டால் அந்நிய சக்திகள் தமது தலையீட்டை இலங்கையில் மேற்கொள்ள முடியாது. தமிழ்மக்கள் தமது அடிப்படை உரிமைகளை அனுபவிக்கவேண்டும். இதன் மூலம்தான் அந்நிய சக்திகளின் தலையீட்டை தவர்க்கமுடியும்.

# தமிழகம் வந்து செங்கல்பட்டு முகாமில் உள்ள தமிழர்களுக்கு இயல்பு நிலையை ஏற்படுத்துங்கள்

## பிரி.தமிழ் ஒன்றியம் ஜெயாவுக்கு கடிதம்

(கொழும்பு)

**போர்ச்சூழல் காரணமாக தமிழகம் வந்த எம் ஈழத்தமிழர்களில் சிலரை மூன்று வருடங்களாக அவர்கள் தங்கள் வழக்குகளைக் கூட எடுத்து நடத்த முடியாத வகையில் தொடர்ந்தும் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தடுத்து வைத்திருப்பது புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது என பிரித்தானிய தமிழர் ஒன்றியத்தினர் புலம்பெயர் தமிழர்கள் குறிப்பிட்டுள்ளனர்.**

செங்கல்பட்டு முகாமில் உள்ள ஈழத்தமிழர் விடயம் குறித்து தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

மனவிரக்தியுடன் அவல வாழ்வு வாழும் இக்கைதிகளை மனித நேயத்தோடு விடுதலை செய்து அவர்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிசமைத்துக்கொடுக்க வேண்டும்.

தமிழக மக்களின் பேரன்பையும் பேராதரவையும் பெற்று தமிழக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்ற தாங்கள் தொடர்ந்தும் திறந்த மனதுடன் ஈழத்தமிழருக்காக குரல் கொடுத்து வருவது மகிழ்வையும் உத்வேகத்தையும் தருகின்றது.

கடந்த வாரம் இலங்கை சென்று திரும்பிய இந்திய பாராளுமன்றக் குழுவில் இருந்து தங்களது பாராளுமன்ற உறுப்பினர்களை நீங்கள் முதலில் விலக்கியதோடு தங்களின் ஆளுமையூடாக இலங்கை அரசினதும் இந்திய மத்திய அரசினதும் உண்மை நிலையை சரியாகப் புரிந்து செயற்பட்டமையானது தங்கள் மேல் உள்ள நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

கொடிய போரின் பின் உறவுக்களையும் உடமைகளையும் இழந்து சாவிலிருந்து மீண்டவர்களாய் ஏக்கத்தோடு வாழும் ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் உங்களின் இந்த கரிசனைக்கு நன்றிகளை தெரிவிக்கின்றோம். அதேவேளை போர்ச்சூழல் காரணமாக தமிழகம் வந்த எம் ஈழத்தமிழர்களில் சிலரை மூன்று வருடங்களாக தொடர்ந்தும் செங்கல் பட்டு சிறப்பு முகாமில் அவர்கள் தங்கள் வழக்குகளைக் கூட எடுத்து நடத்த முடியாத வகையில் தடுத்த வைத்திருப்பது புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் வேதனையுடன் பார்க்கப்படுகின்றது.

இன்று வரை விடுதலை செய்யாது ஏமாற்றப்பட்டு அவல வாழ்வு வாழும் இவர்களுக்கு நீங்கள் மனித நேயத்தோடு செயற்பட்டு தொடரும் அவர்களின் உண்ணா நிலைப் போராட்டத்தை நிறுத்தி அவர்களை விடுதலை செய்து இயல்பு வாழ்க்கைக்கு வழிசமைத்துக் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடும் புலம்பெயர் தமிழ் மக்கள் சார்பில் வேண்டி நிற் கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-2)

# பாவற்குளம் பகுதியில் முதியவரின் சடலம் மீட்பு

வவுனியா பாவக்குளம் முதலாம் யூனிட் பகுதியிலுள்ள தோட்டத்தில் கொட்டகையில் தங்கியிருந்த நிலையில் கடந்த 25 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்த 62 வயதுடைய இலங்கராசா பாழடைந்த கிணறொன்றில் இருந்து சடலமாக கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளார்.


பண்டாரிக்குளத்தில் குடும்பத்துடன் வசித்து வரும் இவர் தனது தோட்டத்தில் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்காக தனது தோட்டத்தில் கொட்டகை அமைத்து தங்கியிருந்த சமயம் வீட்டிற்கு அவர் வராதது தொடர்பில் சந்தேகங் கொண்டு உறவினர்கள் தேடிச் சென்றபோது அவரைத் தோட்டத்தில் காணாததால் செட்டிக்குளம் பொலிஸாருக்கு அறிவித்தல் கொடுத்ததுடன் தேடுதலிலும் ஈடுபட்டனர்.

அதனை அடுத்து காட்டுப் பகுதியாக காணப்பட்ட இடத்தில் உள்ள கிணறொன்றில் கால்கள் கம்பியால் கட்டப்பட்டு நெஞ்சுப் பகுதியில் கற்கள் கட்டப்பட்ட நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். இவரது மரணம் தொடர்பில் செட்டிக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-9-266)

# மசூதி இடிக்கப்பட்டதை கண்டித்து சென்னையில் இன்று ஆர்ப்பாட்டம்

## வைகோ அழைப்பு



(சென்னை)

இலங்கையில் மசூதி இடிக்கப்பட்டதைக் கண்டித்து சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தை இன்று முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்போவதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இது தொடர்பாக கடந்த சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களை இலங்கை அரசு தாக்குவது பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது.ஏப்ரல் 20 ஆம் திகதி மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள என்ற இடத்தில் உள்ள மசூதியை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரால் முற்றுகையிடப்பட்டு ஆயுத சகிதம் இடித்துள்ளனர்.

இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் இன்று சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை மனிதநேய மக்கள் கட்சி நடத்தவுள்ளது. இந்தப் போராட்டத்தில் ம.தி.மு.கவும் பங்கேற்கும் என்று வைகோ கூறியுள்ளார். (அ-2)

# தம்புள்ள பள்ளிவாசல் தாக்கப்பட்டதை ஊடகங்கள் தான் திரிபுபடுத்தியுள்ளன

## கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி கூறுகிறார்

தம்புள்ள மஸ்ஜிதுல் ஹைறியா பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவத்தை ஊடகங்கள் தான் திரிபு படுத்தியுள்ளன என கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரோ தெரிவித்தார்.

காத்தான்குடிப் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் அஷ்ஷஹீம் அஹமட் லெப்பை மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் முஸ்லிம் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

குறித்த பள்ளிவாசலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடைபெற்றதே தவிர பள்ளிவாசல் உடைக்கப்படவில்லை. பள்ளிவாசல் உடைக்கப்பட்டதாக வெளியான செய்திகள் ஊடகங்களால் திரிபுபடுத்தப்பட்டதே ஆகும். அவ்வாறு சம்பவம் இடம்பெற்றதாக நீங்கள் கருதினால் உங்கள் அனைவரையும் தம்புள்ளைக்கு கூட்டிச் சென்று குறித்த பள்ளிவாசலை காட்டுவதற்குத் தான் தயாராகவுள்ளேன் எனவும் முஸ்லிம்களாகிய நீங்கள் அந்தப் பள்ளியில் தொழுகைகளை நிறைவேற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒரு சில பௌத்த மத குருக்களின் நடவடிக்கைக்கு முழு பௌத்த சமூகமும் ஆதரவு தெரிவிக்கவில்லை. இதை வண்மையாகக் கண்டிக்கின்றோம் .ஏனெனில் தம்புள்ள பள்ளிவாசல் சம்பவமானது இனங்களுக்கிடையில் முரண்பாட்டையும் விரிசலையும் ஏற்படுத்தச் செய்யும் நடவடிக்கையாகும்.

இந்த முஸ்லிம்களும் பெரும்பான்மையான முஸ்லிம் நாடுகளும் தான் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் போது இலங்கைக்கு கை கொடுத்தார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாட்டில் 30 வருட புலி பயங்கரவாத யுத்தத்திற்குப் பின்னர் சமாதானமாக, நிம்மதியாக, இன ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் இன்றைய சூழ் நிலையை குழப்புவதற்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல கோணங்களில் பல சதி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு கால கட்டத்தில் முஸ்லிம்கள் அநியாயமாக படுகொலை செய்யப்பட்டார்கள். இதுபோன்ற நிலைமைகள் மீண்டும் உருவாகக் கூடாது என அவர் தெரிவித்தார்.

எல்.ரி.ரி.யினரால் பல அப்பாவி முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டு இருக்கின்றார்கள். அதுபோன்ற நிலைமைகள் இனி ஒரு போதும் நடைபெறக் கூடாது. (அ-2)

# வவு.தமிழ் ம.ம.வித்தி. மீண்டும் பாடசாலை நிர்வாகத்திடம்

(பூந்தோட்டம்)

இறுதி யுத்தத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்த முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் புனர்வாழ்வு நிலையமாக செயற்பட்ட வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆரம்ப பிரிவு கட்டடத் தொகுதிகள் கடந்த வெள்ளிக்கிழமை புனரமைப்பு செய்யப்பட்டு மீண்டும் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பாக வித்தியாலய அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

சுமார் ஆயிரத்து 200 ஆரம்ப பிரிவு மாணவர்களை கொண்ட இவ்வித்தியாலயத்தின் ஆரம்ப பிரிவானது 3 ஆண்டுகாலமாக தற்காலிக கொட்டகைகள் மற்றும் ஆலய முன்றலிலும் இடம்பெற்று வந்த நிலையில் மீண்டும் தனது. சொந்த கட்டடத்தில் செயற்படுவது மாணவர்களின் மன நிலையில் பாரிய உள மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் செயற்பா டென ஆரம்பப் பிரிவின் அதிபர் செல்வர ட்ணம் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி மூலத்தில் புனரமைப்பு செய்யப்பட்ட ஆரம்பப்பிரிவு பாடசாலை கட்டடத்தினை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இப்பாடசாலையின் பழைய மாணவனுமான மு.சந்திரகுமார் திறந்து வைத்திருந்தார்.

இதனை அடுத்து பாடசாலையின் முன்றலில் மரக்கன்றுகளையும் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா ஆகியோர் நாட்டினர். (அ-9-266)

# கடன் வழங்கும் திட்டத்தை மட்டுப்படுத்தும் வங்கிகள்

அரச மற்றும் தனியார் வங்கிகள் சில கடன் வழங்குவதை மட்டுப்படுத்தியுள்ளதாக தெரியவருகின்றது. இலங்கை மத்திய வங்கியின் நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தலுக்கிணங்க தனி நபர்களுக்கான கடன் வழங்கலை மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தனியார் வங்கியொன்றின் உயர் அதிகாரியொருவர் லங்காதீப ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

வீட்டுக்கடன்கள் மற்றும் ஏனைய தனி நபர்களுக்கான கடன் வழங்கல் தற்போது 50 சதவீதத்தால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் நிறைவேற்றதிகாரிகள் மற்றும் உயர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் கடன் வழங்குவதற்கு தமது வங்கி தீர்மானித்துள்ளதாகவும் அவ்வதிகாரி கூறினார். (அ-2)




# சிறுவர் அரங்கம்

86

# குருவின் மகிமை



''குரு காட்டினுள் நுழைந்தார். கோடை, வெப்பம் சுட்டெரித்தது. வெயில் தாங்க முடியாமல் செடி, கொடிகள் சுருண்டன. சுற்றி எங்கும் மனித நடமாட்டமேயில்லை.''

''அப்புறம் என்ன ஆயிற்று, அம்மா?'' என்று நான் ஆவலுடன் கேட்டேன்.

''எதையும் பொருட்படுத்தாமல் குரு நடந்து கொண்டேயிருந்தார். ஆனால், அவருடன் சென்ற சிஷ்யனுக்கு தாகம் நாக்கை வறட்டியது. தனக்கு உடனே குடிக்கத் தண்ணீர் தேவை என்று அவன் சொன்னதும் ''பொறுமையாயிரு! அடுத்த கிராமம் வந்ததும் தண்ணீர் அருந்தலாம்!''என்றார் குரு. அதுவரை தன்னால் பொறுக்க முடியாது என்று சிஷ்யன் பிடிவாதம் பிடித்ததும், குரு தன் கண்களை மூடி தியானம் செய்தார். பின்னர் கண்களைத் திறந்து, ''சிஷ்யா! அதோ, அந்த மலை உச்சியில் உள்ள குடிசையில் ஒரு முஸ்லிம் துறவி இருக்கிறார். அவரிடம் சென்று தண்ணீர் கேட்டு வாங்கி அருந்து!'' என்றார்.

தண்ணீர் கிடைக்கும் என்ற சொற்களைக் கேட்டவுடன், சிஷ்யன் மலையை நோக்கி ஓடினான். கொளுத்தும் வெயிலில் மிக சிரமப்பட்டு மலையுச்சியை ஏறி அடைந்து துறவியை வணங்கிய பின் குடிக்கத் தண்ணீர் கேட்டான். அவர் கிணற்றைக் காட்டி அதிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளச் சொன்னார். கிணற்றை நோக்கி சிஷ்யன் செல்லுகையில் துறவி அவனைப் பற்றிய விபரம் கேட்டார். ''நான் பரமகுருவின் சிஷ்யன்'' என்று அவன் பெருமையுடன் கூறியதும் துறவி வெகுண்டார். ''அந்தக் குருவின் சிஷ்யனா நீ? அப்படியானால் உனக்குத் தண்ணீர் தர மாட்டேன்!'' என்று அவனை விரட்டி விட்டார். ஏமாற்றத்துடன் திரும்பிய சிஷ்யன் குருவை அடைந்து நடந்ததைக் கூற; ''அப்படியா? மீண்டும் அவரிடமே திரும்பிச் செல்! அவரைப் போன்ற ஒரு துறவியின் சிஷ்யன் தான் நீ என்று பணிவுடன் கூறி தண்ணீர் கேள்!'' என்று அவனைத் திருப்பியனுப்பினார். முணுமுணுத்துக் கொண்டே மீண்டும் சிஷ்யன் மலையேறி அந்தத் துறவியை அடைந்து குரு சொல்லியனுப்பியவாறு வேண்டினான். ஆனால் அப்படியும் அவர் மசியவில்லை.

இரண்டாம் தடவையாக மிகுந்த ஏமாற்றத்துடன் சிஷ்யன் திரும்பி குருவிடம் நடந்ததைக் கூற அவர் மீண்டும் ஒரு முறை சென்று தண்ணீர் கேட்கும்படி சொன்னார். இந்த முறையும் அவர் மனம் இரங்கவில்லை. ''பெரிய மகான் உன்னுடைய குரு என்று ஊரெல்லாம் அவர் புகழ் பாடுகிறார்கள். அத்தகைய சக்தி வாய்ந்த உன் குருவால் தானே தண்ணீரை வரவழைத்து உனக்குத் தர முடியாதா?'' என்று இளக்காரமாகப் பேசினார். திரும்பி வந்த சிஷ்யன் நடந்ததை குருவிடம் கூறிக் கொண்டிருக்கும் போதே மிதமிஞ்சிய களைப்பினாலும் தாகத்தினாலும் மயக்கமடைந்தான்.

அவனைத் தொட்டு எழுப்பிய குரு, பாதை யிலிருந்த ஒரு பாறையை தள்ளச் சொன்னார். அவ்வாறே சிஷ்யன் தள்ளியவுடன், நிலத்திலிரு ந்து நீர் பீறிட்டுக் கொண்டு வெளியே வந்தது. அதை இரு கைகளாலும் பலமுறை மொண்டு மொண்டு குடித்த பின்னர் சிஷ்யனின் தாகம் அடங்கியது. அதற்குள், மலை மீதி ருந்த துறவிக்கு தாகமெடுக்க அவர் தன் கிணற்றை நோக்கிச் சென்றார். ஆனால் அவருடைய கிணறு ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லாமல் மாயமாக வற்றிப் போயிருந்தது. அதேசமயம் குருவின் சிஷ்யன் நீரூற் றிலிருந்து தண்ணீரை எடுத்துக் குடிப்பதையும் பார்த்தார். இது ஏதோ குருவின் மாயவேலை என்று கருதி கோபமுற்ற துறவி, மலை மீதிருந்த ஒரு பாறையை குருவை நோக்கி உருட்டித் தள்ளினார்.

தடதடவென சத்தத்தைக் கேட்டு நிமிர்ந்து பார்த்த சிஷ்யன் குருவை நோக்கி உருண்டு வரும் பாறையைப் பார்த்து விட்டு பயந்து நடுங்கி அலறினான். ஆனால் அதைக் கண்டு சற்றும் பதற்றம் அடையாத குரு, பாறை தன் அருகே வரும் வரை ஆடாமல் அசையாமல் உட்கார்ந்து இருந்து விட்டு அருகே வந்ததும் அதைத் தன் கையால் அலட்சியமாகத் தடுத்து நிறுத்தி விட்டார். அந்தப் பாறையில் அவரது கைரேகை பதிந்தது.

இன்று கூட அந்தப் பாறை, அதில் பதிந்துள்ள கைரேகை இரண்டையும் காணலாம். இப்போது அந்த இடத்தில் ஒரு கோயில் எழுப்பப்பட்டுள்ளது என்று கூறி முடித்தாள்.

கதை எனக்கு மிகவும் பிடித்து இருந்தாலும், குரு தன் கையால் உருண்டு வந்த பாறையைத் தடுத்து நிறுத்தியதையும், அந்தப் பாறையில் அவர் கைரேகைத் தடம் பதிந்ததையும் நம்ப முடியவில்லை.

''ஏன் கதை விடுகிறாய்? உருண்டு வரும் பாறையை ஒரு கையால் நிறுத்த முடியுமா?'' என்று தாயைப் பரிகாசம் செய்தேன். பள்ளியில் ஆசிரியை இதே வரலாற்றைச் சொன்ன போது அங்கேயும் அதை எதிர்த்து வாதம் செய்தேன்.

இது நடந்து சில நாட்கள் கழித்து, ஒருநாள் நாட்டில் பயங்கர வன்முறை சம்பவங்கள் நடந்த தாக கேள்விப்பட்டேன். அந்த சமயங்களில், கோயில்களுக்குச் சென்றால் அங்கு வரும் மக்களிடமிருந்து இத்தகைய செய்திகளை விள க்கமாக அறிய முடியும்.

அதற்காக, என் தாய் கோயிலுக்குக் கிளம்ப, நானும் என் தங்கையும் கூடச் சேர்ந்து கொண்டோம். செல்லும் வழி யெல்லாம், என் தாய் நடந்த சோக சம்பவங்களை நினைத்துக் கண்ணீர் மல்க வந்தாள். கோயிலில் வேறு ஒரு விநோதமான செய்தி கிடைத்தது.

வெகு தொலைவிலிருந்த ஒரு நகரத்தில், ஆயிரக்கணக் கான சுதந்திரப் போராட்ட வீரர்கள் கூடியிருந்த போது, அவர்கள் மீது ஆங்கிலேயர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்து ஏராள மானவர்களைக் கொன்று விட்டனராம்! உயிர் தப்பி யவர்கள் அனைவரையும் கைது செய்து ஆங்கிலேய அரசாங் கம் அவர்களை ஓர் இரயில் வண்டியில் ஏற்றி மற்றொரு நகரத்திலிருந்த சிறைச்சாலைக்கு அனுப்பினார்கள். இரயில் வண்டியிலிருந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் மிகப் பசியோ டும் தாகத்துடனும் இருப்பதாகத் தகவல் கிடைத்தது.அந்த செய்தியைக் கேட்ட குருவின் கோயிலுக்கு வந்த பக்கதர்கள் மிகவும் கோபமடைந்தனர்.

ஒரு காலத்தில் தன் சிஷ்யனுக்காகத் தண்ணீரை வரவழைத்து தாகம் தணித்த மகான் ஆகிய குருவின் கோயிலின் வழியாகச் செல்லும் இரயில் வண்டியில் ஆயிரக்கணக் கான சுதந்திரப் போராளிகள் பசியுடனும் தாகத்துடனும் செல்வதா என்று எண்ணிக் கொதித்தனர். அந்த இரயில் வண்டியை வழியில் எங்கும் நிறுத்தக் கூடாது என்று ஆங்கிலேய அரசாங்கம் தடைவிதித்திருந்தது. அந்த இர யில் வண்டியை எப்படியேனும் நிறுத்தி அதிலுள்ள பய ணிகளுக்கு உணவும் குடிதண்ணீரும் அளித்தே தீருவது என்று உறுதி பூண்ட பக்தர்கள் திரளாகச் சென்று இரயில் நிலையத்தை அடைந்தனர். நிலைய அதிகாரியை இர யிலை அங்கு நிறுத்துமாறு மன்றாடிக் கேட்டனர்.

ஆங்கிலேய அரசாங்க அதிகாரிக்கு தந்தி மேல் தந்தியாக அனுப்பிக் கோரிக்கை விடுத்தனர். ஆனால் அரசு அவர்களுடைய கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லை. உணவுப் பொருட்களும் குடிதண்ணீரும் ஏந்திய கூட்டம் இரயில் நிலையத்தில் அலை மோதியது. ஆனால் தனக்கு இரயிலை நிறுத்த தனக்கு அதிகாரமில்லை என்று நிலைய அதிகாரி கை விரித்து விட இரயிலை எப்படியாவது நிறுத்தி விட மக்கள் உறுதி பூண்டனர்.

எவ்வாறு அந்த ரயில் வண்டி நிறுத்தப்பட்டது என்று ஒரு பெண்மணி என் தாய்க்கு விளக்கிக் கூறினார். ''என் கணவர் தண்டவாளத்தின் குறுக்கே படுத்துக் கொண்டார். அவரைத் தொடர்ந்து அவருடைய நண்பர்கள் பலரும் படுத்துக் கொள்ள, அவர்களைக் கண்டு ஆயிரக்கணக் கானவர்கள் தண்டவாளத்தில் படுத்துக் கொண்டனர். கைதிகளை ஏற்றிக் கொண்டு மிக வேகமாக வந்த இரயில் வண்டி பாதையின் குறுக்கே ஏராள மானவர்கள் படுத்திருப்பதைப்,

## அம்புலி மாமா கதைகள்

பார்த்து வேகம் குறைத்தது. ஆனால் என்ஜின் ஓட்டுநர் எத்தனையோ முயன்றும் வேகமாக வந்த இரயிலை நிறுத்த முடியாததால் வண்டி முன்னேறிக் கொண்டே வந்தது. பாதையின் குறுக்கே படுத்தவர்கள் சிறிதும் பயப்படாமல் குருவின் நாமத்தைக் கூறிக் கொண்டே படுத்திருந்தனர். அவர்களில் பலரை நசுக்கிக் கொன்ற பின்னரே இரயில் நின்றது. இரும்புப்பாதை எங்கும் இரத்த ஆறு ஓடியது.''



இதைக் கேட்ட நான் உறைந்து போனேன். என்னால் எதுவுமே பேச முடியவில்லை. அன்று மாலை என் தாய் சிஷ்யனின் தாகம் தணித்த குருவின் கதையை அவளுக்கு முதன் முறையாகக் கூறினாள். அதைக் கேட்டு முடித்ததும் எனக்கு ஏற்பட்ட அதே சந்தேகம் என் தங்கைக்கும் தோன்றியது.

''அது எப்படி உருண்டு வரும் பாறையை குருவினால் தடுத்து நிறுத்த முடிந்தது?'' என்று நான் கேட்ட அதே கேள்வியை அவளும் கேட்டாள். ''ஏன் முடியாது?'' என்று குறுக்கிட்ட நான் ''புயலைப் போல் படு வேகமாக வந்த ஓர் இரயில் வண்டியையே தடுத்து நிறுத்த முடிந்தது எனில் பாறையை ஏன் தடுத்து நிறுத்த முடியாது?'' என்றேன் உணர்ச்சி வசப்பட்டு! அதைக் கேட்ட என் தாயின் கண்களில் கண்ணீர் பெருகியது.





ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்ரமசிங்க தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யாழ். மாவட்டத்திற்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் விஜயமொன்றை மேற்கொண்டனர். இவ்விஜயத்தின் போது பூநகரி சந்தியில் அமைந்துள்ள முனியப்பர் ஆலய வழிபாட்டிற்கு செல்வதையும் கிளிநொச்சி பேருந்து தரிப்பிடத்தில் மக்களுடன் கலந்துரையாடுவதையும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய சிறப்பு வழிபாட்டில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

# பௌத்த பேரினவாதத்தை பெற்றுக்கொள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபடவேண்டும்

## பொன்.செல்வராசா எம்.பி.தெரிவிப்பு

தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபடுவதன் மூலமே சிங்கள பௌத்த பேரினவாதத்தை வெற்றி கொள்ள முடியும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்டக் கிளையால் ஏற்பாடு செய்யப்பட்டு ஆலையடி வேம்பு கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற தந்தை செல்வாவின் 35 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தம்புள்ள பள்ளிவாசல் தாக்குதலைக் கண்டித்து முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டங்களுடன் பூரண ஹர்த்தாலையும் அனுஷ்டித்து வருகின்றனர். சிறுபான்மை சமூகங்கள் மீதான பேரினவாதத்தின் அடாவடித்தனங்களுக்கு எதிரான இத்தகைய நிகழ்வில் நாமும் பங்குபற்றியிருக்க வேண்டும்.

இலங்கையில் சிறுபான்மையினம் மீது சிங்கள் பேரினவாதத்தின் இனவாத அடாவடித்தனங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற வருகின்றன. 1983 ஆம் ஆண்டு கொழும்பில் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டு கப்பலில் வடக்கு கிழக்குக்கு ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டனர். அதேபோன்று தற்பொழுது தென் பகுதியிலிருந்தும் ஏனைய சிங்கள பிரதேசங்களிலிருந்தும் முஸ்லிம் மக்களை வெளியேற்றுவதற்கு இப்பேரினவாதம் இணைந்துள்ளதை நாம் காண்கின்றோம்.

அநுராதபுரத்தில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் முஸ்லிம்களின் தர்ஹா ஒன்றை பௌத்த துறவிகள் அடித்து நொறுக்கிய சம்பவத்தையும் அதனை மீள்கட்டியெழுப்ப முடியாத துர்ப்பாக்கிய நிகழ்வையும் நாம் நினைத்து பார்க்க வேண்டியுள்ளது என்றார். இந்நிலையில் இதற்கு ஏதுவாக முஸ்லிம்கள் தமிழர்களுடன் இணைந்து வரவேண்டும் என அறைகூவல் விடுக்கின்றேன் என பொன். செல்வராசா தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# கிழக்கு பல்கலைக்கு 80 மில்லியன் ரூபா

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மீள் கட்டுமானப் பணிகளுக்கு 80 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக உபவேந்தர் கிட்ணர் கோபிந்தராஜா தெரிவித்துள்ளார்.

இதன் கீழ் பிரதானமாக பல்கலைக் கழகத்தின் இருபக்க சுற்றுமதில்கள் நவீன முறையில் அமைக்கப்படவுள்ளதுடன் புதிய நுழைவாயிலும் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பிரதான மண்டபத்தை நவீன முறையில் புனரமைத்தல், மாணவர்களின் தேவைகள் சார் அபிவிருத்திகள், விடுதிகள் மற்றும் செனட் கட்டடத்தின் திருத்தங்க்ள் என்பனவும் மேற்கொள்ளவுள்ளன.

(அ-2)

# இவ்வருடத்தில் டெங்கினால் 46 பேர் வரை உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டின் கடந்த சில மாதங்களில் மாத்திரம் டெங்கு காய்ச்சலினால் 46 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 10 ஆயிரத்து 685 பேர் நோய்த் தொற்றுக்குள்ளாகியிருப்பதாகவும் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு தெரிவிக்கிறது.

இந்தக் காலப்பகுதியில் நோய்த் தொற்றுக்குள்ளானவர்களில் 50.56 வீதமானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய கால நிலை காரணமாக டெங்கு நுளம்புகள் பரவுவதற்கான வாய்ப்பு அதிகமாக காணப்படுவதாகவும் நுளம்புகள் பெருகும் வகையில் சூழல் காணப்படுமாயின் அதனை சுத்திகரிக்குமாறும் சுகாதார பிரிவு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மூன்று நாட்களுக்கு அதிகமான காலம் காய்ச்சல் குணமடையாத பட்சத்தில் உடனடியாக சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.(அ-2)

# நடவடிக்கையினை பொறுத்தே பொன்சேகாவிற்கு பிணையாம்

## அமைச்சர் டலஸ் கூறுகிறார்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகாவின் நடவடிக்கைகளை பொறுத்தே அவருக்கு பிணை வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்ததாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தேசிய பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவரிடம் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு இராணுவ நீதி மன்றம் வழங்கிய 30 மாதகால சிறைத் தண்டனை கடந்த 26 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது. எனினும் பொன்சேகாவிற்கெதிராக சர்ச்சைக்குரிய வெள்ளைக் கொடி வழக்கு, இராணுவச் சிப்பாய்களுக்கு அடைக்கலம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் தொடரப்பட்ட வழக்கு ஆகியன விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

எனினும் இந்த வழக்குகளிலிருந்து பிணையில் செல்வதற்கு அனுமதிக்குமாறு சரத் பொன்சேகா நீதிமன்றத்தில் கோருவதற்கான சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இவரின் பிணையில் செல்ல அனுமதி கிடைக்குமா என குறித்த ஊடகவியலாளர் அமைச்சர் டலஸ் அழகப் பெருமவிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்தத் தகவலை பத்திரிகையில் வெளியிட வேண்டாம் எனவும் அமைச்சர் குறித்த ஊடகவியலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

மீண்டும்
உங்கள் அபிமானத்துக்குரிய....
சங்குநாதம்
வலம்புரியுடன் இணைந்து ஞாயிறு வாரமலராக
மிகவிரைவில்

- ஆலடிமாநாடு
- வியாசர் கேள்வி பதில்
- சிறுகதை
- அரசியல் ஆய்வு
- சமூகக் கருத்தாடல்கள்


இன்னும்பல...

- ஆலடி மாநாட்டிற்கான தகவல்கள்
- சிறுகதைகள்
- அரசியல் ஆய்வுகள்
- வியாசர்கேள்வி பதில்கள்
- சமூகக் கருத்தாடல்கள்

இவற்றை நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

பிரதம ஆசிரியர்
வலம்புரி- சங்குநாதம்
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

# சர்வதேச நீதிமன்ற நீதிபதியாக இந்திய நீதிபதி தெரிவானார்



இருபது ஆண்டுகளுக்கு பின்னர் சர்வதேச நீதிமன்ற நீதிபதியாக இந்திய நீதிபதி தல்வீர் பண்டாரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றம் நெதர்லாந்தில் உள்ள ஹாக் நகரில் உள்ளது. இந்த நீதிமன்றத்தின் நீதிபதிகளை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடந்தது.

இதில் இந்தியாவின் சார்பில் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி தல்வீர் பண்டாரி போட்டியிட்டார். இவரை எதிர்த்து பிலிப்பைன்ஸ் நீதிபதி புளோரின்டினோ பெலிசியானோ போட்டியிட்டார்.

ஐ.நா. பொது சபையில் நடந்த தேர்தலில் 122 வாக்குகள் மற்றும் ஐ.நா பாதுகாப்பு குழுவில் உள்ள 15 பேரில் 13 பேரின் வாக்குகளை தல்வீர் பண்டாரி பெற்று வெற்றிபெற்றார்.

புளோரின்டினோ 58 வாக்குகள் பெற்றார். இதன்மூலம் 20 ஆண்டுகளுக்கு பின்னர் சர்வதேச நீதிமன்ற நீதிபதியாக இந்திய நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தற்போது 64 வயதாகும் நீதிபதி தல்வீர் பண்டாரி, 20 ஆண்டுகளுக்கு மேலாக நீதித்துறையில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர். (அ-2)

# ஜனாதிபதி பிரதீபா பட்டேல் அரசுமுறை சுற்றுப்பயணம்

(டில்லி)

ஜனாதிபதி பிரதீபா பட்டேல் நேற்றையதினம் அரசு முறை பயணமாக தென் ஆபிரிக்கா செஷல்ஸ் தீவுக்கு பயணமாகியுள்ளார். அவரை துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி, பிரதமர் மன்மோகன் சிங், உள்துறை செயலாளர் ஆர்.கே. சிங், பாதுகாப்புத்துறை செயலாளர் சசிகாந்த் சர்மா மற்றும் இரு நாட்டு தூதரக அதிகாரிகளும் வழியனுப்பி வைத்தனர்.

முதலில் அவர் செஷல் தீவுக்கு செல்கிறார். பின்னர் நாளையிலிருந்து 7 ஆம் திகதி வரை தென் ஆபிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொள்கின்றார். செஷல்ஸ் தீவில் அமைச்சர் ஜேம்ஸ் அலெக்ஸ் மிச்சேலுடன் இரு நாட்டு உறவுகள், வர்த்தக உறவுகள், பற்றி பேச்சுவார்த்தை நடத்துவார்.

மேலும் அந்நாட்டு பாராளுமன்றத்தில் சிறப்புரை ஆற்றுவார். பின் தென் ஆபிரிக்காவில் இரு நாட்டு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார். ஜனாதிபதியுடன் மத்திய அமைச்சர் சச்சின் பைலட் எம். பிக்கள் பிரபா தாகூர் மற்றும் சஞ்சய் சாம்ரோ டோத்ரி ஆகியோர் உடன் செல்கின்றனர். (அ-2)

# பசுபிக் பிராந்தியத்தினுள் நகரும் போர்க்கப்பல்கள்



ஜப்பான் அரசு அதன் கடற்பரப்பில் இருந்த அமெரிக்காவின் போர்க்கப்பல்களை ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்குள் நகர்த்த முடிவு செய்துள்ளது. இதற்கான ஒப்பந்தமும் கையெழுத்தாகி உள்ளது.

இது குறித்து ஜப்பான் வெளிவிவகாரத்துறை அமைச்சர் கொய்சிரோ கெம்பா, இது ஒரு முன்னேற்றகரமான சாதனை என்று தெரிவித்தார்.

இதேவேளை ஜப்பானின் பாதுகாப்புத்துறை அமைச்சர் நவோகி டனாகா கூறுகையில், இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்க படையினரால் கட்டாயமாக மேற்கொள்ளப்பட்டு வந்த குற்றங்களை தடுத்து நிறுத்த முடியும். மேலும் அமைதியை நிலைநாட்டும் செயற்பாடுகளையும் உறுதிப்படுத்த முடியும் என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# ஜன்லோக்பால் கோரி மனித சங்கிலிப்போராட்டம்

வலிமையான ஜன்லோக்பால் கோரி மெரினாவில் நாளை செவ்வாய்க்கிழமை மனித சங்கிலிப் போராட்டம் நடைபெறும் என்று ஊழல் எதிர்ப்பு இயக்கம் அறிவித்துள்ளது. இது குறித்து இயக்க ஒருங்கிணைப்பாளர் ஜாகீர் ஹுசைன் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

குற்றப் பின்னணி உடைய அரசியல்வாதிகளை விசாரிக்க கோரியும் வலிமையான ஜன் லோக்பாலை நிறைவேற்ற வலியுறுத்தியும் மாபெரும் மனித சங்கிலி போராட்டம் நடத்த உள்ளோம்.

அன்றைய தினம் மாலை 4 மணிக்கு மெரினா கடற்கரை காந்தி சிலை முன்பு நடைபெறும் இப்போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் சமூக ஆர்வலர்கள் பங்கேற்கவுள்ளனர் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# கோலாலம்பூரில் தேர்தல் சீர்திருத்தம் கோரி சுதந்திரதின சதுக்கத்தில் மக்கள் போராட்டம்





(கோலாலம்பூர்)

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் தேர்தல் சீர்திருத்தம் கோரி நடந்த பேரணியை பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டு வீசியும் இரசாயனம் கலந்த தண்ணீரைப் பீச்சியடைத்தும் கலைத்தனர்.

பெர்சியா 3 என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் மெர்டேகா சதுக்கம் என்றழைக்கப்படும் சுதந்திர தின சதுக்கத்தில் சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் நேற்று முன் தினம் குழுமினர்.

இதனால் வன்முறை ஏற்பட்டது. மலேசியாவில் பிரதமர் நஜீப் ரசாக் தலைமையிலான ஆளும் கூட்டணி கடந்த 55 ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வருகின்றது.

நஜீப் பதவிக்காலம் முடியும் நிலையில் அங்கு ஜூன் மாதத்தில் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆளும் கூட்டணிக்கு ஆதரவாக வாக்காளர் பட்டியலில் முறைகேடுகள் நடப்பதாகவும் மோசடியாக புதிய பெயர்கள் பதிவு செய்யப்படுவதாகவும் புகார்கள் எழுந்துள்ளன.

இதையடுத்து தேர்தல் சீர்திருத்தங்களை உடனடியாக தொடங்கக் கோரி பல்வேறு பொது நல அமைப்புக்கள் சார்பில் தலைநகர் கோலாம்பூரில் நேற்று முன்தினம் பிரமாண்ட ஊர்வலம் நடந்தது. பொலிஸார் தடுத்து நிறுத்தினர். கலைந்து போக உத்தரவிட்டனர்.

ஆனால் எதிர்ப்பாளர்கள் கலையாததால் கண்ணீர்ப்புகை குண்டுகளை வெடிக்கச் செய்தனர். அப்போதும் கூட்டம் கலையவில்லை.

உடனே தீயணைப்பு வாகனங்கள் மூலம் தண்ணீரைப் கூட்டத்தின் மீது பீச்சி அடித்ததில் உடல், கண் எரிச்சலில் போராட்டக்காரர்கள் அலறினர். இரசாயனம் கலந்த தண்ணீர் என்பதால் மக்கள் ஆத்திரமடைந்து வன்முறையில் இறங்கினர்.

பொலிஸாரின் கார், வான்களை அடித்து நொறுக்கினர். தலைநகரை குலுக்கிய இந்த ஊர்வலம் மற்றும் வன்முறை சம்பவங்களால் மலேசியாவில் பதற்ற நிலை தோன்றியது.

தேர்தல் ஆணையம் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொள்வதாகவும் வாக்காளர் பட்டியலில் முறைகேடு நடப்பதாகவும் பேரணியில் பங்கேற்க வந்திருந்த வழக்குரைஞர்கள், கல்வியாளர்கள், எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தெரிவித்தனர். இதனால் ஆயிரத்து 600 பேர் வரை கைது செய்யப்பட்டனர். (அ-2)

# ஈரான் அணுத்திட்டம் குறித்த பேச்சு மே மாதம் ஆரம்பம்

(டெஹ்ரான்)

ஈரான் தனது அணுத்திட்டம் குறித்து மே 13,14 ஆம் திகதிகளில் சர்வதேச அணுசக்தி முகாமையுடன் பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்துள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரான் அணு சோதனை நடத்துவதாக அமெரிக்க, ஐரோப்பிய யூனியன் கண்டனம் தெரிவித்தன.

ஈரான் மீது பொருளாதார தடையும் விதித்தது. ஈரானின் அணு சோதனை தொடர்பாக சர்வதேச அணுசக்தி முகாமை (ஐ.ஏ.இ.ஏ) துணை தூதர்களை அனுப்பி ஆய்வு செய்தது.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக ஈரான் பேச்சுவார்த்தை நடத்த சம்மதித்துள்ளது. சர்வதேச அணுசக்தி முகாமையின் ஈரானுக்கான நிரந்தர பிரதிநிதி அலி-அஸ்கர் சலோடியனியாக் கூறுகையில்,

ஈரானின் அணுத்திட்டம் எரிசக்திக்காகத்தான். எனினும் இது குறித்து ஐ.ஏ.இ.ஏ முன்னிலையில் சக்தி மிக்க 6 நாடுகளான பிரிட்டன், சீனா, ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா மற்றும் ஜேர்மனியுடன் எதிர்வரும் மே 13,14 ஆகிய திகதிகளில் முதல்சுற்று பேச்சுவார்த்தை நடத்த ஈரான் முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே கடந்த மாதம் துருக்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். மே 23 ஆம் திகதி ஈராக்கிடம் பேசவுள்ளோம் என்றார். (அ-2)

## கொலைவெறி பாடலில் லயித்துப்போன பிரதமர்

தமிழ்த்திரையுல நாயகன் தனுஷ் நடித்த 3 திரைப்படப்பாடல் வை திஸ் கொலவெறி பாடல் தம்மை மயக்கிவிட்டதாக மலேசிய பிரதமர் நஜிப் ரசாக் தெரிவித்துள்ளார்.

தலைநகர் கோலாலம்பூரில் உள்ள தாராகா என்ற தமிழ் வானொலி நிலையத்தின் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று உரை நிகழ்த்திய போதே இந்த விடயத்தை அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறிய தாவது,

வை திஸ் கொலவெறி பாடல் எனக்கும் மிகவும் பிடித்துள்ளது. மலேசியா முழுவதும் கொலைவெறி பாடல் பிரபலம் அடைந்துள்ளது.

மலேசியாவில் வாழும் இந்தியர்கள் மீது தன் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். (அ-2)

# படங்கள் வெளியிட முடியாது; நீதிமன்றில் மனு தள்ளுபடி

(வோஷிங்டன்)

பாகிஸ்தான் அபோதாபாத் நகரில் கடந்த ஆண்டு மே 2 ஆம் திகதி ஒசாமா பின்லேடன் சுட்டுக்கொல்லப்பட்டார். அந்த கடைசி நேரத்தில் என்ன நடந்தது என்பது தொடர்பான படங்கள், வீடியோவை வெளியிட கோரி தொடர்ந்த வழக்கை அமெரிக்க நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

நீதித்துறை கண்காணிப்பு என்ற சமூக அமைப்பினர் அமெரிக்க நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர். தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட இந்த வழக்கின் தீர்ப்பு கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

தீர்ப்பில் நீதிபதி கூறியிருப்பதாவது,

ஆயிரம் வார்த்தைகளுக்கு ஒரு படம் சமம் என்று சொல்வார்கள். சுட்டுக் கொல்லப்பட்ட பின்லேடனின் படங்களை வெளியிட்டால் அமெரிக்கர்களுக்கு எதிராக வன்முறை ஏற்படும் வாய்ப்பு உள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்பை முன்னிட்டு இந்தப் படங்கள், தகவல்களை, தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெற முடியாது.

அவை தடை செய்யப்பட்ட விடயங்கள். எனவே பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட காட்சிகள், அவரது இறுதி சடங்கு தொடர்பான படங்கள், தகவல்கள் எதையும் வெளியிட முடியாது என நீதிபதி தீர்ப்பளித்தார். (அ-2)

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படாதீர்கள். தாமதமின்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள் ~ நெப்போலியன் ஹில்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## 11 வருடம் படித்து 17 புள்ளிபெற முடியா கணித பாடத்தை என்செய்வோம் பராபரமே!

மகிந்த சிந்தனை அதனூடான அறிவுப் பிரவாகம் ஆயிரம் பாடசாலைத் திட்டம் என்ற பட்டோலையின் அமுலாக்கம் தடல் புடலாக நடக்கின்ற வேளையில்,

க.பொ.த. சாதாரண தரத்தில் கணித பாடத்தின் சித்தி நிலைமையை நினைத்தால் தலை சுற்றும்.

பொதுவில் 35 புள்ளிகளைப் பெற்றால் அந்தப் பாடத்திற்கு சாதாரண சித்தி வழங்க முடியும் என்பது பொது நியதி.

இருந்தும் மாணவர்கள் குறித்த பாடங்களில் பெற்றுக் கொள்கின்ற புள்ளி வீச்சுக்களின் அடிப்படையில் சாதாரண சித்தி முதல் அதி விசேட சித்தி வரையான பெறுபேறுகளிடப்படுகின்றன.

அந்த வகையில் கணித பாடத்தை சித்தியடைந்த பாடமாக ஏற்றுக் கொள்வதற்கு ஆகக் குறைந்தது 17 புள்ளிகள் மட்டுமே போதும் எனக் கல்வி அமைச்சர் பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு 17 புள்ளி பெற்றால் கணித பாடத்தில் சித்தியடைய முடியும் என்றிருந்த போதிலும்– எத்தனையோ மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியடையவில்லை.

இதனை இன்னும் தெளிவாகக் கூறுவதாயின் மாணவர்களில் பலர் க.பொ.த. சாதாரண தரத்தில் கணித பாடத்தில் 17 புள்ளிகளைக் கூடப் பெறவில்லை என்று கூறிக் கொள்ளலாம்.

பதினொரு ஆண்டுகள் பாடசாலையில் கணித பாடத்தை கற்ற மாணவர்கள் ஆகக் குறைந்தது 17 புள்ளிகளைக் கூடப் பெற முடியவில்லை என்றால் நிலைமை எப்படி என்பதை ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

மகிந்த சிந்தனை அறிவுப் பிரவாகம் என்றெல்லாம் கூறிக் கொள்கின்ற இலங்கைத் திருநாட்டில் மாணவர்களின் கணித ஆற்றல் மகா விழுக்காட்டில் செல்கின்றதெனில்,

எதிர்காலத்தில் எப்படி அறிவுப் பிரவாகம் இந்த மண்ணில் வெடிக்கும்?

கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள், விஞ்ஞானத் தேடல்கள் என அத்தனைக்கும் கணிதம் அடிப்படை.

அந்த அடிப்படையில் நாங்கள் படுதோல்வி கண்டுள்ளோம்.

இந்த தோல்வியில் இருந்து மாணவச் செல்வங்களை மீட்டெடுக்க வேண்டும்.

விருப்பக் குறைாக இருக்கக்கூடிய கணித பாடத்தை விருப்புக்குரிய பாடமாக மாற்ற வேண்டும்.

இதனைச் செய்வதற்கு அரசியல் தளத்தில் நேர்மையான செயலாக்கங்கள் அவசியம்.

பேசுவது ஒன்று செய்வது ஒன்று என்பதாக நாட்டின் நடைமுறைகள் இருக்குமாயின்,

மாணவர்கள் இறுக்கமான பாடங்களில் இருந்து விலக்குப் பெற முற்படுவர். அதாவது அரசியல்வாதிகள் சமயத்தின் ஊடாக அல்லது இனத்தின் ஊடாக அல்லது மொழியின் ஊடாக அரசியல் நடத்த முற்படுகின்றபோது, மாணவர்களும் ஏதோவொரு வகையில் அந்த வலைக்குள் சிக்கி விடுகின்றனர்.

அதன் விளைவாக கடினமான பாடத்தில் செலவிடவேண்டிய நேரத்தில் இருந்து அவர்கள் விலகிக் கொள்வதற்காக 'அரசியல் குப்பைகளை' தமது மனச்சாட்சிக்கு சான்றாக்கி படிப்பில் இருந்து தப்பித்துக் கொள்வர்.

ஆக, கணித பாடம் மட்டுமல்ல; மாணவர்களின் ஒட்டுமொத்த அறிவியலும் ஓங்க வேண்டுமாயின் ஒழுங்கான ஆட்சியும் அரசியலும் நாட்டில் நிலவ வேண்டும்.

## 2011 க.பொ.த(சா/த) பரீட்சைப் பெறுபேற்று முடிவு

# முதல் 55 இடங்களைப் பெற்ற பாடசாலைகளில் யாழிற்கு 3 இடம் - வேறு தமிழ் பாடசாலைகள் இல்லை

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிபுகளில் அகில இலங்கை ரீதியில் முதல் ஐம்பத்தைந்து இடங்களை பெற்ற பாடசாலைகளின் பெயர் விபரங்களை பரீட்சை திணைக்களம் வெளியிட்டுள்ளது.

பரீட்சை திணைக்களத்தால் 2011 ஆம் ஆண்டின் க.பொ.த. சாதாரண தர பரீட்சை முடிபுகளின் பகுப்பாய்வு அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள மேற்படி விபரத்தின் பிரகாரம் முதல் ஐம்பத்தைந்து இடங்களைப் பெற்ற பாடசாலைகளில் மூன்று பாடசாலைகள் மட்டுமே தமிழ் பாடசாலைகள் என்பதும்,

அம் மூன்று பாடசாலைகளும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐம்பத்தைந்து இடங்களில் பன்னிரண்டாவது இடத்தை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியும் பதினைந்தாவது இடத்தை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் ஐம்பத்தோராவது இடத்தை பருத்தித்துறை ஹாட்டிக்கல்லூரியும் பெற்றுள்ளன. (ந)

# பொன்சேகாவுக்கு இராணுவ நீதிமன்று விதித்த தீர்ப்பு தண்டனைக் குறைப்புக்கு விண்ணப்பிக்க முடியாது

## சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு

முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகா இராணுவ நீதிமன்றத்தால் குற்றவாளியென கூறப்பட்டு தண்டனைக்குட்பட்டவர் என்பதால் நன்னடத்தையின் அடிப்படையில் சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் தண்டனைக் குறைப்புக்கு விண்ணப் பிக்க முடியாது என சிறைச்சாலைகள் ஆணையாளர் பி.டபிள்யூ. கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

தனது மருமகன் தொடர்புபட்ட நிறுவனம் ஒன்றிற்கு முறைகேடாக ஒப்பந்தம் ஒன்றை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் சரத் பொன்சேகாவுக்கு இராணுவ நீதிமன்றத்தால் 30 மாதகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பமான சரத் பொன் சேகாவின் சிறைத்தண்டனை 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதமே முடிபடையவுள்ள நிலையில், நன்னடத்தையின் அடிப்படையில் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டு அவர் கடந்த வியாழக்கிழமை விடுதலை செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இராணுவ நீதிமன்றத்தின் தண்டனைக்கு உட்பட்டதால் சரத் பொன்சேகா தண்டனைக் குறைப்புக்கு விண்ணப்பிக்க முடியாது என சிறைச்சாலைகள் ஆணையாளர் கொடிப்பிலி கூறியுள்ளார்.

அதேவேளை, சிறைச்சாலைகள் ஆணையாளரின் இக் கருத்து தொடர்பில் சரத் பொன்சேகாவின் வழக்கறிஞர் நளின் லத்துவஹெட்டி விசனம் வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசியல் அமைப்பின்படி இராணுவ நீதிமன்றமும் ஏனைய நீதிமன்றங்களைப் போன்றது என சரத் பொன்சேகா தொடர்பான ஒரு வழக்கில் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக அவர் தெரிவித்தார். அத்துடன் இராணுவ நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டு நன்னடத்தை அடிப்படையில் தண்டனைக் காலம் குறைக்கப்பட்ட ஏனைய கைதிகள் உள்ளதாக குறிப்பிட்ட நளின் லத்துவஹெட்டி சரத் பொன்சேகாவை இலக்கு வைத்து சிறைச்சாலைகள் ஆணையாளர் புதிய வாதங்களை முன் வைப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

வெள்ளைக் கொடி விவகார வழக்கிலும் சரத் பொன்சேகாவுக்கு 3 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அவர் மேன்முறையீடு செய்துள்ள நிலையில் அவருக்கு பிணை வழங்குமாறு கடந்த வியாழக்கிழமை உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மற்றொரு செய்தி 15ஆம் பக்கத்தில்) (ந- 8,11)

# ஐ.தே.கட்சியுடன் இணைந்த மேதினம் ரெலோ புறக்கணிக்கும் - சிறிகாந்தா

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தவுள்ள மேதின ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் கலந்து கொள்வதில்லை என ரெலோ இயக்கம் முடிபெடுத்துள்ளது.

இது தொடர்பாக ரெலோ இயக்கத்தின் தலைமைக் குழு உறுப்பினரும் ரெலோ இயக்கத்தின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் முன்னாள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான என். சிறிகாந்தா தெரிவிக் கையில்,

கடந்த 25ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தனது வீட்டில் இடம்பெற்ற ரெலோ இயக்கத்தின் தலைமைக் குழுக் கூட்டத்தின் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

சிங்கள பேரினவாதக் கட்சி ஒன்றுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து கூட்டாக மேதினத்தைக் கொண்டாடுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளினதும் கூட்டத்தில் எந்த முடிபும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கொழும்பில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து மேதினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவது தொடர்பில் தனது எதிர்ப்பை ரெலோ இயக்கம் உட்பட மூன்று கட்சிகள் தெரிவித்திருந்தன.

நீண்ட விவாதத்தின் பின்னர் முடிபு எதுவும் எடுக்கப்படாமல் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. இதன் பின்னர் கூட்டமைப்பின் பெயரால் தன்னிச்சையாக எடுக்கப்பட்ட முடிபின் பிரகாரம் இக் கூட்டு மேதின நிகழ்வு நடைபெறவுள்ளது.

தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கும் எந்தவொரு சிங்களப் பேரினவாதக் கட்சியுடனும் இணைந்து கூட்டான அரசியல் நடவடிக்கைக்கு தமிழர் பிரதேசத்தில் இடமில்லை.

இதற்கு மாறாக சிங்களப் பேரினவாதத்துடன் தமிழ் மண்ணிலேயே கைகோர்த்து தமிழ் மக்கள் மத்தியில் சிங்களப் பேரினவாதத்திற்கு அடித்தளம் அமைத்துக் கொடுப்பதாகவே அமைந்து விடும்.

இது அரசியல் ரீதியாக மிகத் தவறான நடவடிக்கையாகும். இக்காரணங்களினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டாக நடத்தவுள்ள கூட்டத்திலும் ஊர்வலத்திலும் பங்குபற்றுவதில்லை என எமது அமைப்பு முடிபெடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## சொந்தக்காலில் நிற்கப் பழகு



சோம்பேறித்தனத்தை எந்தவழியிலாவது துரத்தி விடுங்கள். சுறுசுறுப்பு என்னும் எதிர்ப்பால் சோம்பலைத் தூக்கி எறியுங்கள்.

அளவற்ற பலமும் பெண்ணைப் போல இரக்க இதயமும் பெற்றவனே வீரன் ஆவான்.

இளைஞர்களே! தேச முன்னேற்றம் என்னும் தேர்ச்சக்கரம் சுழல்வதற்குப் பலம்மிக்க உங்கள் தோள்களைக் கொடுங்கள்.

தன்னம்பிக்கை கொண்டிருக்கும் ஒரு சிலரின் வரலாறே உலக சரித்திரமாக இருக்கிறது.

பொறாமை நமக்கு வேண்டவே வேண்டாம். கீழ்த்தரமான தந்திரத்தால் எந்தச் செயலையும் சாதித்துவிட முடியாது.

யாருடைய இதயம் ஏழைகளுக்காக கண்ணீர் வடிக்கிறதோ அவரே மகாத்மா.

ஆன்மீகத்தை சரியான வழியில் பின்பற்றாமல் போனதால் சமுதாயம் வீழ்ச்சியடைந்து விட்டது.

சொந்தக்காலில் நிற்கப்பழகுவதே கல்வியின் அடிப்படை இலட்சியமாக இருக்கவேண்டும்.

# நாட்டின் பிரச்சினைகளை மூடிமறைக்க இன,மத வாதத்தை அரசு தூண்டிவிடுகிறது

## விக்கிரமபாகு தெரிவிப்பு

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு உட்பட நாட்டின் அனைத்து பிரச்சினைகளையும் மூடி மறைக்க இனவாதத்தையும் மத வாதத்தையும் அரசாங்கம் தூண்டி விடுகின்றது. இதற்கு எதிராகவும் நாட்டின் ஜனநாயக உரிமைக்காகவும் அனைத்து இன மக்களும் ஓரணியில் திரண்டு போராட வேண்டும்.

ஐ.தே.க. தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் புதிய இடதுசாரி முன்னணி உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளும் அமைப்புக்களும் ஒன்றிணைந்து யாழில் நடத்தும் மேதினக் கூட்டம் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தும் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

நிப்போன் விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச எம்.பி.யாழில் நடைபெறுகின்ற மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்றும் அச் செயற்பாடானது கரும் புலிகளுக்கும் பிரிவினைவாதத்திற்கும் துணை போகக் கூடியது. எனவே அக்கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டாம் என்று கடிதம் மூலமாக எம்மிடம் கேட்டுக் கொண்டார்.

தந்தை வழியே பிள்ளையினதும் வழி என்பார்கள். ஆனால் இங்கு தந்தையான முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் கொள்கைகளுக்கு முரணான வகையிலும் தற்போதைய மக்கள் விரோத ஆட்சியின் பாதுகாவலனாகவுமே சஜித் பிரேமதாச எம்.பி.செயற்படுகின்றார். இவர்களிடம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைககள் குறித்து பேசுவதில் நியாயமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே நாட்டில் பிரச்சினைகள் நாளுக்கு நாள் உக்கிரம் அடைந்து இன, மத பேதங்கள் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. இதனை அனுமதிக்க முடியாது. நாட்டைப் பாதுகாக்கவும் பொது மக்களின் எதிர்காலத்தை உறுதி செய்யவும் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என விக்ரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## திருத்தி வாசிக்கவும்

வலம்புரிப் பத்திரிகையில் நேற்றைய தினம் 22 ஆம் பக்கத்தில் வெளியான வணிகர் கழகம் தொடர்பான செய்தியில் 4 ஆயிரத்து 600 கோழிகள், ஆயிரத்து 800 கோழிகள் என்பதற்குப் பதிலாக கோடி ரூபா என அச்சுத்தவறு ஏற்பட்டு ள்ளது.

தயவு செய்து கோடி ரூபா என்பதற்குப் பதிலாக கோழிகள் என திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

# வெவ்வேறு விபத்து சம்பவங்களில் ஐவர் பலி!

(கொழும்பு)

கொகரெல்ல, மொனராகலை, பியகம, வெலிகம ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் ஐவர் உயிரிழந்துள்ளனர்.

வெலிகம பகுதியில் ஜீப் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜீப்பின் சாரதி சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். கொக்கரெல்ல, கொஸ்கெலே பிரதேசத்தில் வான் ஒன்றில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் சந்தேகத்தில் வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மொனறாகலை, பொத்துவில் பிரதான வீதியில் லொறி ஒன்றும் முச்சக்கர வண்டியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, பியிய பண்டாரவத்தை பகுதியில் டிப்பர் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ-2)

## மரண அறிவித்தல்

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியைப் வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி. கனகலட்சுமி கணேசபிள்ளை

27.04.2012 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற கனகமாணிக்கம் நாகம்மா ஆகியோரின் அன்புப் புதல்வியும்,

காலஞ்சென்ற சுப்பிரமணியம், ராசம்மா ஆகியோரின் மருமகளும், கணேசபிள்ளையின் அன்பு மனைவியும், லோகலட்சுமி, கிருஷ்ணவேணி ஆகியேரின் சகோதரியும் ஆவர். இவர் ஜெயகௌரி (லண்டன்), பிரியதர்சினி, நளாயினி, (ஆசிரியர் யாழ்/இந்து ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் தாயாரும், சிவகுமார்(பொறியியலாளர்-லண்டன்), புஸ்பராஜா(வைத்திய கலாநிதி), ஆனந்த செந்தூரன் ஆகியோரின் மாமியாரும், கபிலன், சங்கவி, காயத்திரி, லட்சுமி, சாயிப்பிரியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் பற்றி விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

94/6, அருணாசலம் லேன்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி

தகவல்
குடும்பத்தினர்.

(இ)

# மரண அறிவித்தல்

## சிவரூபராணி செந்திவடிவேலு



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவரூபராணி செந்திவடிவேலு அவர்கள் 28.04.2012 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-திலகவதி (மாரிமுத்து) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், நல்லதம்பி செந்திவடிவேலு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிறீதரன், நவநீதன்(அவுஸ்திரேலியா) காலஞ்சென்ற மணிவண்ணன், பால்ராஜன்(லண்டன்), காலஞ்சென்ற ரஞ்சித்குமார், யசோதை(இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகதுரை, மங்களேஸ்வரி, கஜலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், பிறண்டன், அபிஷா, வினுஷா, சிறிதரன், மணிவண்ணன், கேசவன், ரஞ்சித்குமார், அருண்குமார் ஆகியேரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

தொ.பே:-0776354237

(சி-6467)

# ராஜஸ்தான் அதிர்ச்சி ; டில்லி ஒரு ஓட்டத்தால் திரில் வெற்றி

ஐந்தாவது ஐ.பி.எல். தொடரில் டில்லியில் நடைபெற்ற போட்டியில் டில்லி டேர்டேவில்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் நேற்று மாலை மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி டேர் டேவில்ஸ் முதலில் துடுப்பெடுத்தாட முடிபு செய்தது.

அதன்படி களமிறங்கிய டில்லி டேர்டேவில்ஸின் தொடக்க வீரர் ஜெயவர்த்தன 2 ஓவரிலேயே 6 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த பீற்றர்சனும் 5 ஓட்டங்களில் ராவிட்டிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.




தொடக்கத்திலேயே அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்களையிழந்த டில்லி டேர்டேவில்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கையை, அணித் தலைவர் சேவாக் தூக்கி நிறுத்தினார் அதிரடியாக ஆடிய சேவாக் தொடரில் தனது 4 ஆவது அரைச்சதத்தைக் கடந்தார்.

அதன்பிறகும் அதிரடியைத் தொடங்கிய சேவாக் 39 பந்துகளைச் சந்தித்து 8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 63 ஓட்டங்களைக் குவித்து, மெனார்ரியாவிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

அவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்து ஆடி வந்த ரோஸ் ரெய்லர் 25 ஓட்டங்கள் எடுத்து போல்டானார்.

அடுத்து வந்த நாமன் ஒஜா அதிரடியாக ஒரு சிக்ஸர் அடித்து. அடுத்த பந்தில் டிராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். கடைசிக் கட்டத்தில் யோகேஷ் நகருடன் ஜோடி சேர்ந்த இர்பான் பதான் அணியின் ஓட்ட எண்ணிக்கையை மெதுவாக உயர்த்தினார். யோகேஷ் நகர் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடித்து 27 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

கடைசிப் பந்தில் இர்பான் பதான் பவுண்டரி அடிக்க, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் முடிவில் டில்லி டேர்டெவில்ஸ் அணி 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 152 ஓட்டங்களை எடுத்தது.

153 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி பெறலாம் என்று களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி மந்தமாக தொடங்கினாலும், 5 ஓவர்களுக்கு பிறகு அதிரடிக்குத் தாவியது.

ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய ராகுல் டிராவிட், ரஹானே ஜோடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை சீராக உயர்த்தினர்.

15 ஓவர்கள் வரை விக்கெட்டை இழக்காமல் ஆடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 99 ஆவது ஓட்டத்தை எடுத்த போது முதலாவது விக்கெட்டை இழந்தது.

அணித்தலைவர் ராகுல் டிராவிட் 40 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அதன் பிறகு அதிரடியாக ஆடிய ரஹானே அரைச்சதம் கடந்தார்.

அவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்து ஆடிய பிரட் ஹொட்ஜ் 22 ஓட்டங்கள் எடுத்து எல்.பி.டபிள்யூ ஆனார்.

கடைசி வரை ரஹானே களத்தில் நின்று அணியின் வெற்றிக்காக பாடுபட்டார். கடைசி ஓவரில் 12 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் ரஹானே 1 சிக்ஸ் அடித்து நம்பிக்கை அளித்தார்.

ஆனால் கடைசி பந்தில் வெற்றி பெற 2 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் பந்தை அடிக்க தவறிய ரஹானே ரன் ஓட, எதிர் முனைக்கு சென்ற ஒவைஸ் ஷா ஆட்டமிழந்தார்.

இதனால் கடைசி வரை களத்திலிருந்து போராடிய ரஹானே ஆட்டம் வீணாகி, ராஜஸ்தான் றோயல்ஸ் ஒரு ஓட்டத்தில் தோல்வியை தழுவியது.

கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்த ரஹானே 63 பந்துகளில் ஒரு சிக்ஸர் 9 பவுண்டரிகள் அடித்து 84 ஓட்டங்கள் எடுத்தார்.

இப் போட்டியில் சிறப்பாட்டக்காரராக சேவாக் தெரிவானார்.

# டெக்கானை வீழ்த்தியது மும்பை

ஐ.பி.எல் போட்டித் தொடரின் 40 ஆவது லீக் ஆட்டம் மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி டெக்கான் அணி முதலில் துடுப்பாட்டம் செய்ய களமிறங்கியது.

அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக ஷிகர் தவான் மற்றும் பார்த்தீவ் பட்டேல் ஆகியோர் களமிறங்கினர்.

ஓரளவு அதிரடி காட்டிய தவான் 29 ஓட்டங்களிலும் பார்த்திவ் பட்டேல் 19 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

அதன் பின் வந்த வீரர்கள் யாரும் நிலைத்து நின்று ஆடாமல், அடுத்தடுத்து விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தனர்.

இதனால் டெக்கான் அணி18.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 100 ஓட்டங்களில் சுருண்டது. டுமினி ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களை எடுத்தார்.

மும்பை அணியின் சிறப்பான பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பு காரணமாக டெக்கான் அணி எளிதில் வீழ்ந்தது.

மும்பை தரப்பில் மலிங்க அதிகபட்சமாக 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

ஹர்பஜன் சிங் மற்றும் பிராங்லின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.


101 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை அணி களமிறங்கியது.

மும்பைக்கும் ஆரம்பம் அதிர்ச்சியாகவே இருந்ததது.

முதல் பந்தில் லெவி ஓட்டமேதும் பெறாமல் ஆட்டமிழந்தார். அடுத்து டெண்டுல்கருடன் ஜோடி சேர்ந்த சர்மா ஓரளவு நிலைத்து நின்று ஆடினார்.

டெண்டுல்கர் 14, கார்த்திக் 2, பிராங்லின் 13 ஓட்டங்கள் என ஆட்டமிழந்தாலும் மும்பை இந்தியன்ஸ் அணி 18.1 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.





இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக டெக்கான் அணியின் ஸ்ரையன் தேர்வானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டி:**
இரவு 8 மணிக்கு சென்னையில் நடைபெறும் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி எதிர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மோதுகிறது.



ஜெர்மனியில் நடந்த பார்ஸ்ச் டென்னிஸ் தொடரின் அரையிறுதியில் போலாந்தின் ரத்வன்ஸ்காவை வீழ்த்திய பெலாரசின் அசரென்கா.

# டெஸ்ட் தொடரை கைப்பற்றியது ஆஸி.

அவுஸ்திரேலிய மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையேயான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இரண்டு



போட்டிகளின் முடிவில் அவுஸ்திரேலியா 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

இந் நிலையில் தொடரை நிர்ணயிக்கும் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி டொமினிகாவில் நடந்தது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் 328 ஓட்டங்களுக்கு ஆட்டம் இழந்தது.

அந்த அணியின் மேத்யூ வடே அதிகபட்சமாக 106 ஓட்டங்களை குவித்தார். மேற்கிந்தியத்தீவுகள் வீரர் ஷில்லிங்போர்டு 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனையடுத்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 218 ஓட்டங்களில் சுருண்டது. சந்தர்போல் அதிகபட்சமாக 68 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலிய வீரர் லியன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் 110 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்சை தொடக்கிய அவுஸ்திரேலிய அணி 259 ஓட்டங் எடுத்து ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக ரிக்கிபொண்டிங் 57 ஓட்டங்களும், எட்கோவன் 55 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். ஷில்லிங்போர்டு 4 விக்கெட்டுக்களும், கேமர் ரோச், டியோ நறைன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக் களை வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸி அணி 369 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இதனையடுத்து 370 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நான்காம் நாள் ஆட்ட நேர முடிபில் 5 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சந்தர்போல் 69 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் கடைசி நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அணித் தலைவர் டேரன் சமி சிறப்பாக ஆடினார்.

அவருக்கு மற்ற வீரர்கள் யாரும் ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. சமி 61 ஓட்டங்கள் எடுத்த நிலையில ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தோல்வி உறுதியானது. கடைசி வீரராக வந்த ஷில்ங்போர்டு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 294 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. ஷில்லிங்போர்டு 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனால் அவுஸ்திரேலிய அணி 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதுடன் 2:0 என்ற கணக்கில் தொடரையும் கைப்பற்றியது.

அவுஸ்திரேலிய வீரர் மேத்யூ வடே ஆட்ட நாயகனாகவும் மேற்கிந்தியத்தீவுகள் சந்தர்போல் தொடர்நாயகனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# சிறுநீர் கழித்த நபருக்கு நீதிமன்றம் அபராதம்!

பொது இடத்தில் சிறுநீர் கழித்த நபர் ஒருவருக்கு நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது. கொழும்பு பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

கோட்டையில் பழைய டச்சு வைத்திய சாலை கட்டிடத் தொகுதியிலுள்ள உணவு விடுதியொன்றிற்கு அருகில் இந்நபர் சிறுநீர் கழித்ததாக குற்றம் சுமத்தப்பட்டார்.

மேலும் பொதுமக்களுக்கு தொல்லை ஏற்படும் வகையிலும் அருவருப்பான வகையிலும் நடந்து கொண்டார் என பொலிஸார் இவர் மீது குற்றஞ்சுமத்தியிருந்தனர்.

குற்றத்திற்காக நபரொருவர் கைது செய்யப்பட்டு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார். அந்த நபரை 50 ரூபா அபராதம் செலுத்துமாறு கொழும்பு கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரட்ண உத்தரவிட்டார்.

கைது செய்யப்படும்போது இந்த நபர் மது போதையில் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-8;11)

## கருணாநிதியின்...

அழுத்தமும் வழங்க வேண்டும் என கருணாநிதி ஆரம்பத்தில் கூறியபோது, இது இந்திய மத்திய அரசாங்கத்தின் கருத்தல்ல என்பதால் அது தொடர்பில் இலங்கை அரசாங்கம் முதலில் கருத்தில் கொள்ளவில்லை.

ஆனால் தமிழீழத்துக்கு ஆதரவான கருத்துக்களை கருணாநிதி தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். அத்தடன் தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினரான டி.ஆர். பாலுவும் தமிழீழத்துக்கு ஆதரவாக இந்திய நாடாளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றியிருந்தார்.

தமிழீழம் தொடர்பான கருணாநிதியின் பரப்புரைகள் தீவிரம் பெற்றுவரும் நிலையில் அது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது. குறிப்பாக இந்திய மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தி.மு.கவின் தலைவரும் முக்கிய அரசியல்வாதியுமான கருணாநிதி இவ்வாறு பரப்புரைகளை மேற்கொள்வதன் பின்னணி தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

எமது அரசாங்கத்தில் பல கட்சிகள் அங்கம் வகிப்பதுபோல் இந்திய அரசாங்கத்திலும் பல கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. எனவே கருணாநிதியின் கருத்துக்களை இந்திய அரசின் கருத்துக்களாக கருதத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8,11)

நவீன அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணமயமான
திருமண அழைப்பிதழ்கள் மற்றும்
அனைத்துவிதமான அச்சுவேலைகளையும் தரத்துடனும், குறைந்த செலவுடனும் விரைந்து பெற்றுக்கொள்ளவும்
அவற்றுடன்....
கல்வெட்டுப் புத்தகங்களுக்கான 4 வர்ணக் கவர்களுக்கும்...
பாரதி பதிப்பகம்
இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3081

## அரசியல் தீர்வை...

முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என இலங்கை அரசாங்கத்தை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும். இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வு ஒன்றை முன்வைத்து வெளிநாடுகளில் உள்ள தமிழ் அகதிகள் மீண்டும் நாடு திரும்புவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும்.

இலங்கை படைத்தரப்பினால் வடபகுதியில் தமிழ்க் குடும்பங்களின் காணிகள் பறிக்கப்பட்டுள்ளன. அக்காணிகள் மீண்டும் அம் மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

- வடபகுதியில் படைத்தரப்பினருக்கு பதிலாக பொலிஸாரை நிலைநிறுத்துவது குறித்து இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு உறுதியான ஒரு பதிலை வழங்க வேண்டும்.

இலங்கைக்கு தமிழ் தெரிந்த ஆங்கில, விஞ்ஞான மற்றும் கணித பாட ஆசிரியர்களை இந்திய மனித வள அமைப்பு அனுப்பி வைத்து தமிழ் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் எனவும் அக்கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ந-8,11)

## தெரிவுக் குழுவில்...

அபிவிருத்தி பணிகளில் பாரிய குறைபாடுகள் உள்ளன. இதற்கு முக்கிய காரணம் பொது மக்களின் அபிப்பிராயம் கேட்கப்படுவதில்லை. எதிர்க் கட்சிகளின் ஆலோசனைகளும் பெறப்படுவதில்லை.

அபிவிருத்திகளை முன்னெடுக்கும் போது அப்பகுதி மக்களின் விருப்பத்தை கேட்டறிந்து கொள்வதோடு எதிர்க் கட்சிகளின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்பட வேண்டும்.

1994 ஆம் ஆண்டிற்கு பின் துரதிர்ஷ்டவசமாக நாம் ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளமுடியாத நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம்.

இதேவேளை வடக்கில் குற்றச்செயல்கள், அநீதிகள் பரவலாக இடம்பெற்றாலும் குறிப்பாக நெடுந்தீவில் சட்டத்துக்கு முரணான பல செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

யாழ். மாவட்ட அபிவிருத்தியில் இப்பகுதி மக்களும் இணைக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத் தமிழர்களை இந்த அரசு பயங்கரவாதிகளாக காட்ட முற்படுகின்றது. மக்களை பயப்பீதியில் தொடர்ந்து வைத்திருக்க முற்படுகின்றது என்றார். (ந-6,8)

## பீரிஸை சந்தி...

ஹிலாரி கிளின்டன் சந்திக்கவுள்ளார்.

இந்தியத் தலைவர்களுடனான பேச்சுவார்த்தையின் போது பிராந்திய மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளது.

அதேவேளை இச் சந்திப்பில் இலங்கை விவகாரம் குறித்தும் கவனம் செலுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இதுகுறித்து உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத் தொடரில் அமெரிக்கா கொண்டுவந்த இலங்கை மீதான தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு வழங்கிய பின்னர் இவ்விரு நாடுகளின் உயர் மட்ட அரசியல் தலைவர்கள் முதற்தடவை சந்தித்துப் பேசவுள்ளனர். இதனால் இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-8;11)

## இலங்கைக் குழு...

எழுப்பும் எனவும் எதிர்ப் பார்க்கப்படுகின்றது..

அதேவேளை அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வாஷிங்டனுக்கு விஜயம் செய்யவுள்ள பீரிஸ் தலைமையிலான குழுவினர் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகள் பலரையும் சந்திக்கவுள்ளனர்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனை எதிர்வரும் 18 ஆம் திகதி பீரிஸ் தலைமையிலான குழுவினர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சூசன் ரைஸ் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மனிதவுரிமைகள் விவகாரங்களுக்கு பொறுப்பான சமந்தா பவர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனிதவுரிமைகளுக்கான கீழ்நிலைச் செயலாளர் மரியா ஒரேரோ ஆகியோரையும் பீரிஸ் தலைமையிலான குழுவினர் சந்திக்கவுள்ளனர்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த இந்த மூத்த அதிகாரிகள் அனைவரும் மனிதவுரிமை விவகாரங்களில் கூடிய கவனத்தை செலுத்துபவர்கள் என்பதால் இலங்கை அரசாங்கத்தின் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பீரிஸ் தலைமையிலான குழுவினரிடம் இவர்கள் கேள்வி எழுப்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸுடன் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜின் வாஸ் குணவர்த்தன மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் வாசிங்டன் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8;11)

## மேஜர் ஜெனரல்..

பேச்சாளர் சரத் திசநாயக்க உறுதிப்படுத்தி ளார்.

இவரது இடத்துக்கு யாரை நியமிப்ப என்று இன்னமும் முடிபு செய்யப் வில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளா மேஜர் ஜெனரல் பிரசன்ன வரும் காலத்தி வேறு எங்காவது இராஜதந்திரப் பதவி ஏது வழங்கப்படுமா என்ற கேள்விக்கும் அ பதிலளிக்க மறுத்துவிட்டார்.

இவரது பணிக் காலம் முடிபடைந்த நிை யிலேயே இலங்கைக்கு திரும்புவதாகவு சரத் திசநாயக்க கூறியுள்ளார்.

இறுதிக் கட்டப் போரில் இராணுவத்தி 59 ஆவது டிவிசனுக்கு தலைமைதாங்கி மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா போர் குற்றவாளி என்றும் அவருக்கான இரா தந்திர விலக்குரிமையை நீக்க வேண்டு என்றும் பிரித்தானிய தமிழர் பேரவை பிர தானிய வெளிவிவகார அமைச்சரிடம் கே யிருந்தது.

அத்துடன் பிரித்தானிய நாடாளுமன் திலும் மேஜர் ஜெனரல் பிரசன்ன சில் தப்பிச் செல்ல இடமளிக்கக் கூடாது என் குரல் எழுப்பப்பட்டு வந்தமையும் குறிப்பி தக்கது. (ந-8,11)

## யாழ்ப்பாணம் சென்று..

குணரட்ன, ஐ.தே.கவைப் பாதுகாப்பதற்கா அமைப்பின் பேச்சாளர் லால் பெரேரா ஆ யோர் துண்டுப் பிரசுரங்களை விநியோகி தனர்.

எனினும் தனது தந்தையின் நினை தின நிகழ்ச்சியில் மக்களைப் பங்குபற் செய்வதற்கு ஆர்வம் கொண்டவர்கள் பிரசாரங்களை மேற்கொள்ளலாம் என ஆனால் இப் பிரசாரங்களில் தனக்கு சம்ப மில்லை எனவும் சஜித் பிரமேதாஸ கூறின (ந-8,11)

புதிய தாசன் கல்வி நிலைய
ஜெற் மோட்டேஸ் அருகில், கே.கே.எஸ்.றோட் , கன்னா
A/L 2014
கலை, வர்த்தகப் பிரிவுகள்

| | |
|---|---|
| பொருளியல் | தமிழ் |
| வரதராஜன் | க. ஜெசிந்தன் |
| வணிகக்கல்வி | இந்/சம, இந்/நாக |
| முரளி | சுரேஸ் |
| கணக்கீடு | நாடக/அரங் |
| பகீரதன் | ரமேஸ் |
| அரசியல் | புவியியல் |
| பொன் சந்துரு | குமரன் |
| அளவையியல் | வரலாறு |
| E.S. பவன் | சுதன் |
| வணி/புள்ளி, பொதுஅறிவு | விவசாயம் |
| தவசேகர் | பிரபல ஆசிரியர் |

ஆரம்பம் : 30.04.2012 திங்கட்கிழமை
நேரம்: மாலை 3.45 மணி

உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.
விசேட சலுகைகள்!
மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.
DHL WORLDWIDE EXPRESS
கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட
DHL WORLDWIDE EXPRESS



திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி. T.P : 021 222 7835

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1Kg க்கு UK 630/= Germany 730/= France 775/=
மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பொதிகள் உங்கள் வீட்டிற்கே வந்து ஏற்றுக்கொள்ளப்படும். (Door to Door Service)
24 மணி நேரத்தில் விநியோகிக்கும் சேவை. (TDD Service)
சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி. யாழ்
Arrul Global Express
International Courier & Cargo Service
T.P : 021 222 6113

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டு